# நிதிநிலையை சீராக்க 'நாட்டை காப்பாற்றுங்கள்'!

egistered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 117
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 25 ரபி. ஆகிர் 3 திங்கட்கிழமை [8-6-70]

ஈழநாடு சந்தா

| | தினப்பதிப்பு | | வாரப் பதிப்பு |
|---|---|---|---|
| 3 மாதம் | ரூ. | 18-00 ரூ. | 4-00 |
| 6 மாதம் | ரூ. | 34-00 ரூ. | 7-50 |
| 1 வருடம் | ரூ. | 66-00 ரூ. | 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஆகஸ்ட் மாதத்தில் அரிசி இரண்டு கொத்து கிடைக்கும்

## ஆளும் கட்சிக் குழுக்கூட்டத்தில் நிதியமைச்சர் தகவல்



கொழும்பு, ஞாயிறு

இரண்டு கொத்து அரிசி இன்னும் இரண்டு மாதங்களில் கிடைக்கக்கூடும். வரவு-செலவுத் திட்டத்தைச் சமாப்பிப்பதுடன் ஆகஸ்ட் மாதத்தில் இரண்டு கொத்து அரிசி வழங்க முடியுமென நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா நேற்று ஆளும்கட்சுக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

திரு. டட்லி சேனநாயகாவின் அரசாங்கத்தின் காலத்தில் பங்கீட்டரிசி இரண்டு கொத்திலிருந்து ஒரு கொத்தாகக் குறைக்கப்பட்டது. வெட்டப்பட்ட ஒருபடி அரிசியையும் கூட்டணி ஆட்சிக்குவந்ததும் கொடுக்கும் என்று கூட்ட ணியினர் உறுதியளித்திருந்தனர்,

# என். எம். ஆரம்பிக்கும் நிவாரண நிதி

(நமது நிருபர் பெரி. சுந்தரலிங்கம்)

கொழும்பு, திங்கள் 'நாட்டைக் காப்பாற்றுங்கள்' என்ற புதிய நிவாரண நிதியை நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா ஆரம்பித்திருக்கிறார்.

நாட்டின் நிதி நிலைமை வங்குரோத்தான நிலையில் இருப்பதாகப் புதிய நிதியமைச்சர் தெரிவித்ததைத் தொடர்ந்து பொதுமக்கள் பலரிடமிருந்தும், அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்தும், பொது ஸ்தாபனங்களிலிருந்தும் நிதி உதவி கிடைத்தவண்ணம் இருப்பதாக டாக்டர் என். எம். பெரேரா தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து 'நாட்டைக் காப்பாற்றுங்கள்' என்ற ஒரு புதிய நிவாரண நிதியை ஏற்படுத்தி அதன் மூலம் நாட்டின் நிதி நிலைமையை ஓரளவாவது சீராக்க டாக்டர் என்.எம் நடவடிக்கை மேற்கொள்கிறார்.

பிரதமர் உட்பட கூட்டணி அரசின் சகல எம். பி.க்களும் 'நாட்டைக் காப்பாற்றுங்கள்' நிவாரண நிதிக்கு நிதி உதவியளிக்க முன்வந்துள்ளனர்.

தொழிற்சங்கங்கள், அரசாங்க ஊழியர்கள், பொது ஸ்தாபனங்கள் இந்நிதிக்கு உதவிசெய்ய வாக்குறுதியளித்துள்ளனர்,

பொதுமக்கள் தங்களால் 'இயன்றவரை 'நாட்டைக் காப்பாற்றுங்கள்' நிவாரண நிதிக்குக் கொடுத்துதவ வேண்டுமென டாக்டர் என். என். வேண்டுகோள் விடுகிறார்.

## மக்கள் வெற்றித் தினத்தையொட்டி

# 800 கைதிகளுக்கு விடுதலை!

## தூக்குத் தண்டனையிலும் மாற்றம்

கொழும்பு, ஞாயிறு 800 சிறைக் கைதிகளுக்கு ஜுன் 14-ம் திகதி விடுதலையளிக்கப்படவிருக்கிறது. மக்கள் வெற்றித் தினத்தையொட்டி அரசு இந்தப் பரிசை சிறைக் கைதிகளுக்கு அளிக்கிறது. நீண்டகாலமாகத் தண்டனை அனுபவித்து வருபவர்களே விடுதலை செய்யப்படுகிறார்கள்.

இன்றுவரை தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு ஆயுட்காலத் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ளது. (சி.பி.ஏ.)

## எதிர்க்கட்சி முன்வரிசையில் தமிழரசார்!

கொழும்பு, ஞாயிறு இன்று ஆட்சிமன்றம் முதல் தடவையாகக் கூடிய போது, எதிர்கட்சி அங்கத்தவர்களுக்கான முன்வரிசையில் தமிழரசுக் கட்சியினர் அமர்ந்திருந்தனர். யு. என். பி. யினரும் மற்றொரு பக்கத்தில் முன்வரிசையிலேயே அமர்ந்திருந்தனர். தமிழ் காங்கிரஸ் எம். பி.க்கள் மூவரும் எதிர்கட்சி இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்தனர்.

## அரசுக்கு ஒருநாள் சம்பளம்!

கொழும்பு, ஞாயிறு பன்னீராயிரம் இலங்கை போக்குவரத்துச்சபை ஊழியர் தமது ஒருநாள் சம்பளத்தை மக்கள் வெற்றித் தினத்தையொட்டி ஒருநாள் சம்பளத்தை அரசாங்கத்திற்கு அளிக்க முன்வந்துள்ளனர்.

## இலவச வகுப்பு

பாடசாலைகளில் ஊழல்:

## களைதல் வேண்டும்'

உடுப்பிட்டி, ஞாயிறு "எனது சேவையே எனது இலட்சியம். கல்வித்தரத்தை உயர்த்த எனது தொகுதிப் பாடசாலைகளில் தகுந்த ஆசிரியர்களை நியமிக்கவேண்டியது அவசியம்."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார். திரு. அப்பையா தலைமையில் இவ்வரவேற்பு நடைபெற்றது.

## அனுராதபுரம் செல்கின்றனர்

கொழும்பு, திங்கள் மந்திரிமார்களும், ஆட்சிமன்ற உறுப்பினர்களும் இன்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் மகாபோதியில் வழிபாடு நடத்த அனுராதபுரம் செல்கிறார்கள்.

## விடுதிகளின் பெயர்களை மாற்றிஎழுதினர்

பேராதனை, ஞாயிறு பேராதனைப் பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர் விடுதிகளின் பெயர்களை மாணவ சங்கங்கள் மாற்றிஅமைத்து அவற்றுக்குப் பதிலாக வேறு பெயர்களை எழுதியுள்ளன. புதிய பெயர்கள் நீலநிற மையினால் எழுதப்பட்டுள்ளன.

விஜயவர்த்தனா விடுதிக்கு பண்டாரநாயக்கா சாலாவ என்றும், மாக்கஸ் பெர்னாண்டோ விடுதிக்கு கார்ல்மாக்ஸ் சாலாவ என்றும், ஜேம்ஸ் பீரிஸ் விடுதிக்கு கெப்பிட்டிபொலசலாவ என்றும், இராமநாதன் விடுதிக்கு கந்தசாமி சாலாவ என்றும் மாற்றி

## ஐக்கியமுன்னணி அரசின்

## டொரிக் டி சூசா

## சபாநாயகர் ஸ்டான்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் பங்கீட்டரிசி இரண்டு ... சிலையும் கூட்டணி ஆட்

# ஐக்கியமுன்னணி அரசின் புதிய உதவி அமைச்சர்கள்

கோட்டை, ஞாயிறு

ஐக்கிய முன்னணி அரசின் புதிய உதவி அமைச்சர்களாக 21 பேர் நேற்று நியமிக்கப்பட்டனர், அவர்கள் பின்வருமாறு:

1. பாதுகாப்பு வெளிநாட்டு அமைச்சு: திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி-திவுலப்பிட்டிய எம். பி.
2. திட்டத் தயாரிப்பு. வேலைவசதி அமைச்சு. திரு. ரத்னேதேசப்பிரிய சேனநாயக்கா-மின்னேரிய எம்.பி.
3. நீர்ப்பாசன, மின்சார அமைச்சு: திரு. சௌரத் சோமரத்ன-அம்பாறை எம். பி:
4. வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு; திரு. பி. ஆர் இரத்னயக்கா-மாவனல்லை எம். பி.
5. கல்வி அமைச்சு: திரு. பீ. வை, துடாவை-மாத்தறை எம். பி.
6. கப்பல்துறை, உல்லாசப் பயணத்துறை அமைச்சு: திரு. ரி. பி விக்கிரமசிங்கா-மாவத்தகமை எம். பி.
7. தொழில் அமைச்சு: திரு. பி. ஜி. எச், சிரிசேன-அக்குறணை எம். பி.
8. பொதுசேவை, உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சு: திரு நீல் டீ அல்விஸ்-பத்தேகம எம். பி.
9. கைத்தொழில், விஞ்ஞானத்துறை அமைச்சு: திரு. எஸ் கே. சூரியாராச்சி-மஹர எம். பி.
10. நிதி அமைச்சு: திரு. பேர்னட் சொய்ஸா-கொழும்பு தெற்கு 2-வது எம். பி
11. போக்குவரத்துஅமைச்சு: திரு. ரீ. பீ. எம். ஹேரத்-வலப்பனை எம். பி.
12. தோட்டங்கள், கைத்தொழில் அமைச்சு திரு. அல்பேட் காரியவாசம்-பெந்தர எல்பிட்டிய எம். பி
13. நீதி அமைச்சு: திரு. இரத்தினசிரி விக்கிரமசிங்க-ஹொரணை எம். பி
14. காணி விவசாய அமைச்சு: திரு. எச். எம். நவரட்ண-மினிப்பே எம். பி
15. மீன்பிடித்துறை அமைச்சு: திரு. எஸ். டீ. எஸ். ஜயரத்ன-சிலாபம் எம். பி.
16. வீடமைப்பு, கட்டிடத்துறை அமைச்சு: திரு. பி: எச். பண்டார-பதுளை எம். பி.
17. தபால், தந்திப் போக்குவரத்து அமைச்சு: திரு. வீ. ரி. ஜி. கருணாரத்ன-ரக்வான் எம். பி.
18. சுகாதார அமைச்சு: செனட்டர் ஜே. பி. ஒபயசேகரா.
19. தகவல், ஒலிபரப்பு அமைச்சு: ஜனுப் ஏ. எல். அப்துல் மஜீத்-மூதூர் முதல் எம். பி.
20. சமூகசேவைகள் அமைச்சு: திரு. ஜீ. வை. சமரசிகா-குளியாப்பிட்டி எம். பி.
21. கலாச்சார அமைச்சு: திரு. சோமவீர சந்திரசிரி-கெஸ்பாவ எம். பி.

## டொரிக் டி சூசா நிரந்தரக் காரியதரிசி

கொழும்பு, ஞாயிறு

தோட்டத்தொழில் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாகடாக்டர் டொரிக்டி சூசா நியமிக்கப்படலாமென அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது, பல்கலைக்கழகப் பேராசிரியரான டாக்டர் டொரிக் டி சூசா லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர்களுள் ஒருவராவர்.

தோட்டத் தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா என்பது தெரிந்ததே.

# சபாநாயகர் ஸ்டான்லி உபசபாநாயகர் காதர்

கோட்டை, ஞாயிறு

கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு ஸ்டான்லி திலகரத்ன ஆட்சிமன்ற சபாநாயகராக ஏகமனதாக இன்று தெரிவு செய்யப்பட்டார்.

உப சபாநாயகராக வேருவளைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஐ. ஏ. காதர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆட்சிமன்றம் இன்று கூடியபோது சபை முதல்வர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா, திரு. ஸ்டான்லி திலகரத்னவின் பெயரைச் சபாநாயகர் பதவிக்குப் பிரேரித்தார். இதனை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆமோதித்தார்.

உப சபாநாயகருக்கான பெயரை திரு.ரி பி இலங்கரத்ன பிரேரிக்க எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு ஆர். பிரேமதாசா ஆமோதித்தார்.

புதிய சபாநாயகரைப் பாராட்டி, காணி நீர்ப்பாசன மந்திரியும், சபை முதல்வருமான திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில், நாட்டின் நலன் கருதி இந்த அரசாங்கம் செயல்படுமெனவும், புதிய சபாநாயகர் ஆட்சிமன்ற நடவடிக்கைகளை திறம்பட நடத்துவாரென்றும் கூறினார்.

திரு. ஜே.ஆர்.ஜெயவர்த்தன பேசுகையில், புதிய சபாநாயகர் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் உரிமைகளைப் பேணிநடப்பாரென்ற நம்பிக்கை உண்டென்றார். இதற்குப் பதிலளித்து சபாநாயகர் பேசுகையில் இந்த அரசாங்கம் மக்களின் நல்லெண்ணத்தை ஈடுசெய்யும் வகையில் நடந்துகொள்ளுமெனவும், எல்லா உறுப்பினர்களும் பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டுமெனவும் கூறினார்.

றித் தினத்தையொட்டி ஒருநாள் சம்பளத்தை அரசாங்கத்திற்கு அளிக்க முன்வந்துள்ளனர்.

## இலவச வகுப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

ஆசிரியர்களுக்கான ஆங்கில விசேட பயிற்சி வகுப்பு ஒன்று கீரிமலையில் இலவசமாக நடைபெற்றுவருகிறது.

1970ம் ஆண்டு ஆடி மாதம் நடைபெறவிருக்கும் ஆங்கில விசேட பயிற்சிக் குரியபிரவேசப்பரீட்சையை முன்னிட்டு இப் பயிற்சி வகுப்பு நடக்கிறது.

மன்ற உறுப்பினர்களும் இன்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் மகாபோதியில் வழிபாடு நடத்த அனுராதபுரம் செல்கிறார்கள்.

விசேட ரயில் மூலம் செல்லும் இவர்களை மந்திரிகள் மைத்திரிபால சேனநாயக்கா, இரத்நாயக்கா, அரசாங்க அதிபர் ஆகியோர் அனுராதபுரத்தில் வரவேற்பார்கள்.

பிரார்த்தனையில் கலந்துகொண்ட பின் இன்று மாலையே கொழும்பு திரும்புகிறார்கள்.

சாலாவ என்றும், ஜேம்ஸ் பீரிஸ் விடுதிக்கு கெப்பிட்டிபொலசலாவ என்றும். இராமநாதன் விடுதிக்கு கந்தசாமி சாலாவ என்றும் மாற்றி எழுதப்பட்டுள்ளது.

## தேசியமயமாக்குக

கொழும்பு, ஞாயிறு

வெளிநாட்டு வங்கிகளைத் தேசியமயமாக்கும்படி இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

# "சமயமென்ற கண்கொண்டே உலக உண்மை காணவேண்டும்"

## யாழ்ப்பாணம் வந்துள்ள தமிழக அறிஞர் முருகேசமுதலியார் கருத்து

யாழ்ப்பாணம், திங்கள்

'அரசியல், பொருளாதாரம், சமூகவியல் எல்லாத் துறைகளிலும் சமய உணர்ச்சி ஊடுருவி நிற்க வேண்டும். சமய உணர்ச்சியும் எழுச்சியும் இல்லாத வாழ்க்கை கண்ணில்லாத வாழ்க்கையாகும். சமயமென்ற கண்ணைக் கொண்டே இந்த உலகத்தின் உண்மைகளைக் காணவேண்டும். எந்த நாட்டுக்கும், எந்தச் சமூகத்துக்கும் பொதுவான நியதியாகச் சமயம் முன்நிற்க வேண்டும்'.

இவ்வாறு தமிழக அறிஞர் இராவ் சாகிப் திரு நல். முருகேச முதலியார் நேற்று பலாலி விமான நிலையத்தில் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

அகிலஇலங்கைச்சேக்கிழார் மன்றம் எடுக்கும் ஐந்தாவது சேக்கிழார் விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்ற திரு நல் முருகேச முதலியார் வந்துள்ளார்.

விமான நிலையத்தில் அறநெறிக்காவலர் முதலியார் செ முத்துத்தம்பி வித்துவான் கா கி. நடராஜன் முன்னாள் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் ச. அம்பிகைபாகன், திரு. சச்சிதானந்தம் ஆகியோர் முருகேச முதலியாரை மாலை சூட்டி வரவேற்றனர்.

### சேக்கிழார் விழா இன்றைய நிகழ்ச்சிகள்

இடம்: யாழ். இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபம்.

காலை 9 மணி- பூசை, தேவாரம்— இசைமணி கா. மாணிக்கவாசகர், திருமுறை ஓதல்—இராமநாதன் கல்லூரி மாணவிகள், அளவை இசைக் கலைமன்ற மாணவர், யாழ். மத்திய கல்லூரி மாணவர்.

காலை 10 மணி:- திரு. மு. ஞானப்பிரகாசம்—சொற்பொழிவு.

10-40:- திருமுறை ஓதல்—வல்வை சிதம்பராக்கல்லூரி மாணவர், யாழ், இந்துக்கல்லூரி மாணவர்.

11-10:- புராணபடனம்—சண்டேசுரநாயனர் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை, பிரம்மஸ்ரீ, ந. ரங்கசாமி சர்மா, சங்கீத பூஷணம் சி. விநாசித்தம்பி.

பிற்பகல் 5-00 — 6-45

வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலிருந்து விழா மண்டபம் வரை ஊர்வலம்.

### சேக்கிழார் விழா

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்.

தலைவர்: திரு. ம. ஸ்ரீகாந்தா:

7-10 தலைமையுரை.

7-25: சொற்பொழிவு "சேக்கிழார் காட்டும் உவமை நயம்"— பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி.

8-00: 'சேக்கிழார் தெய்வச்சிறப்பு' — இராவ் சாகிப் நல். முருகேச முதலியார்.

# யாழ்ப்பாணத்தில் தங்கம் விலை ரூ. 190!

யாழ்ப்பாணம், திங்கள்

பவுண், தங்கம், வெள்ளி முதலியனவற்றின் விலை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தேர்தல் முடிந்து, புதிய அரசாங்கம் பதவியேற்றநாள் தொடக்கம் இவற்றின் விலை உயர்ந்துகொண்டு போகிறது.

140 ரூபாவாக விற்ற ஒரு பவுண் தற்போது 165 ரூபாவாக விற்கப்படுகிறது. தங்கம் 150 ரூபாவிலிருந்து 190 வரைஉயர்ந்துள்ளது.

அதேபோல வெள்ளி, செம்பு முதலியவற்றின் விலையும் அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நாளுக்குநாள் தங்கம் பவுண் விலை அதிகரித்தபடியேயிருக்கின்றது. இப்பொருட்களின் திடீர் விலையேற்றத்துக்கான உண்மையான காரணம் இன்னும் தெரியவில்லை. தங்கத்தை சிலர் பதுக்கத் தொடங்கியிருப்பதும் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. இதனால் தங்கத்தை விலைக்கு வாங்கி நகைகள் செய்து பிழைக்கும் சிறு வியாபாரிகளும், பாவனையாளர்களும் பெரிதும் கவலை கொண்டிருக்கிறார்கள்.

## கணவர் உலகைச்சுற்ற மனைவி தேர்தலில் போட்டி

மொஸ்கோ, ஜூன் 7

விண்வெளி வீராங்கனை வலன்டீனா ரஷ்ய ஆட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றார். வலன்டினாவின் கணவர் அன்றிநிக்கலாயோ சோயுஸ் 9 விண்வெளிக் கப்பலில் உலகை வலம் கொண்டிருக்கும் அதே வேளையில் திருமதி வலண்டினா தேர்தல் பிரசாரங்களில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

ஜூன் 16-ம் திகதி தேர்தல் நடைபெறும் போது வலன்டினாவின் கணவர் உலகை வந்து கொண்டிருப்பார் என எதிர் பார்க்கப்படுகிறது.

# பறிமுதலான கூப்பன்கள் மீண்டும் வழங்கப்படும்!

கொழும்பு, ஞாயிறு

விவசாயிகளின் பறிமுதலான அரிசிக் கூப்பன்கள் மீண்டும் வழங்கப்படவுள்ளன. அரசாங்கத்திடமிருந்து பெற்ற விவசாயக் கடனை உரிய நேரத்தில் திருப்பிக் கொடுக்காதவர்களின் கூப்பன்களை முந்திய அரசாங்கம் பறிமுதல்செய்தது.

தேர்தல் காலத்தில், இப்போது பதவியேற்றுள்ள கூட்டணி அரசாங்கம் பறிமுதலான கூப்பன்களைத் தாம் பதவியேற்றதும் உடனடியாக வழங்குவதென்று மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தது.

இதனையடுத்து இப்போது இந்தப் பறிமுதலான கூப்பன்கள் உடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கொழும்பு

# குதிரைப்பந்தயத் திடலில் பெரும்வீடமைப்பு திட்டம்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் மாபெரும் வீடமைப்புத்திட்டம்செயல்படவிருக்கிறது.

இப்போது பதவியேற்றுள்ள கூட்டணி அரசு எதிர்க்கட்சியாக இருந்த சமயம் வீடமைப்புத் திட்டம் ஒன்றை இங்கு ஏற்படுத்தவேண்டுமெனத் தெரிவித்துவந்துள்ளது.

வீடமைப்பு மந்திரி திரு. பீட்டர் கெனமன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறார்.

## ஈ.ஆர்.எஸ்.ஆர். பெற்றோலியம் தலைவர்

கொழும்பு, ஞாயிறு

பெற்றோலியம் கூட்டுத்தாபனத் தலைவராக திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி நியமிக்கப்பட்டுள்ளார். திரு. ஆழ்வாப்பிள்ளை முன்னர் கூட்டுத்தாபனத் தலைவராக இருந்தார்.

# 'யு.என்.பி- மீண்டும் தலைதூக்க முடியாது'

## வண. ஞானசீஹ கூறுகிறார்

காவத்தை, ஞாயிறு

வீழ்த்தப்பட்டஐக்கிய தேசியக்கட்சி மீண்டும் தலைதூக்க இடம் வைக்கமாட்டோம். ஐக்கிய தேசியக்கட்சிக்கு முட்சி கொடுக்கும் முதலாளித்துவத்தையும் இங்கு விட்டுவைக்கப் போவதில்லை.

இவ்வாறு காவத்தை கிராமசபையினுல் கூட்டணி ஆட்சி மன்ற உறுப்பினர்களைவரவேற்பதற்காக நடத்தப்பட்ட கூட்டத்தில் வண. ஹேன்பிட்ட கெதர ஞானசீகதேரோ கூறினார்.

நமது நாடு இருளில் இருந்து மீண்டுவிட்டதாக இன்னும் நினைக்காதீர்கள். ஐக்கியதேசியக் கட்சியினர் மீண்டும் எவ்வாறாயினும் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட முயற்சிஎடுக்கிறார்கள். என்று குறிப்பிட்ட வண. ஞாசீகதேரோ நீதியற்றமுறையில் ஐக்கியதேசியக் கட்சியினர் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி செய்வார்களானால் பிக்கு உடையைக் களைந்துவிட்டு நாட்டையும் தேசத்தையும் காப்பாற்றுவதற்கான போராட்டத்தில் இறங்க நான் தயங்கப்போவதில்லையென்று அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடுகள் 6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளுக்கு வழிகாட்டிப்படி எல்லாப் பாடங்களுக்கும். இரண்டாம் பருவத்திற்கு மாதிரிகை வினுக்கள், வினுவிடைகள் வெளிவந்துள்ளன. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 2277

### கல்வி

சித்தி நிச்சயம். ஜி. சி. ஈ. (சாதாரணம்) கலை/விஞ்ஞானம்/வர்த்தகம், (உயர்தரம்) கலை / வர்த்தகம். ஜி. ஏ. கியூ. ஆசிரிய பயிற்சிகலாசாலை பிரவேசம், விசேஷ ஆங்கிலம்/சிங்களம் சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், வர்த்தக கணிதம், பகல்/மாலை/ஓய்வுநாள் வகுப்புகளுககு பிரவேசங்கள் ஏற்கப்படுகின்றன. அனுபவமிக்க பட்டதாரிகளால் நடாத்தப்படுவது. மகளிருக்கு தனி விடுதி. யூனெட்டெட் அக்கடமி, நெல்லியடி, கரவெட்டி. 2276

ஜீ. சீ. ஈ. கலை/விஞ்ஞான/வர்த்தக/சிங்கள (காலை/மாலை) வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ்ப்பாண டியூடோறியல் கல்லூரி, 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2292

### தேவை

திறமை வாய்ந்த ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர் உடனே தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் காண்க. 6, பெரிய தெரு, யாழ்ப்பாணம். 2287

லிகிதர்:

ஆங்கில அறிவுள்ள சைக்கிள் ஓடத் தெரிந்த லிகிதர் தேவை. பிணைப்பணம் ரூபா 3000/-. சம்பளம் ரூபா 200/-. விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். P. நாகலிங்கம், புற்றளை, புலோலி. 2288

## விண்ணப்பம்

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபையின் வருடாந்தக் கூட்டம்

**19—6—70ல்**

கொழும்பு

சரஸ்வதி மண்டபத்தில்

காலை 9-30 மணிக்கு

நடைபெறும்.

கௌரவ காரியதரிசி.

7-6-70. 2299

## கேள்வி விளம்பரம்

பிள்ளையார் கோவில் றேட்டு வேலைக்குச் சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் அச்சுவேலிக் கிராமசபைத் தலைவரால் 13-6-70ந் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு கேள்விக்கும் ரெண்டர் பணம் ரூபா 50/-ம் கேள்விப் பத்திரப் பணம் ரூபா 10/-ம் கட்டியதன் பேரில் 10-6-70ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணி வரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்களை கிராமசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

செ. கதிர்காமநாதன்,
தலைவர்,
கிராமசபை,
அச்சுவேலி.

கிராமசபை அலுவலகம்,
அச்சுவேலி,
1-6-70. 2300

சுழிபுரம், ஞாயிறு

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் புதிய ஞதிகாரியாக மூளாயைச் சேர்ந்த ஆசிரியர் திரு. திரு. சி. கார்த்திகேயர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## சுகாதார தினம்

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர் பிரிவில் விரிவான முறையில் சுகாதார வாரத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர்—கே. ஆர். விஜயா நாகேஷ்—வி கே. ராமசாமி நடித்த

**பெண்ணை வாழ விடுங்கள்**


# வெற்றித்தின முத்திரை 14-ம் திகதி வெளிவராது

கோட்டை, ஞாயிறு

மக்கள்வெற்றித்தினத்தை முன்னிட்டு வெளியிடப்படவிருந்த 10 சத முத்திரை திட்டமிட்டபடி இம்மாதம் 14 ந் திகதி வெளியிடப்படமாட்டாதெனத் தெரிகிறது. குறுகியகாலத்தில் இதை வெளியிட முடியாதிருப்பதாக வெளியீட்டுப் பொறுப்பாளரான உள்நாட்டு வரி இலாகா கமிஷனர் திரு. எஸ். சிற்றம்பலம் நிதிஅமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

முத்திரையில் இடம்பெற வேண்டிய நிறம், டிசைன் சம்பந்தமாகவும் திரு. சிற்றம்பலம் நிதிஅமைச்சர் டாக்டர் என். எம், பெரேராவுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

புதிய முத்திரை வெளியிடப்படும் திகதி திட்டவட்டமாக அறிவிக்கப்படவில்லையாயினும் 3 மாதங்கள் வரை செல்லும் என திரு. சிற்றம்பலம் கூறினர். காலஞ்சென்ற பிரதமர் எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயகாவின் 11-வது சிரார்த்ததினமான செப்டம்பர் மாதம் 26-ம் திகதி புதிய முத்திரை வெளியிடப்படலாம் எனத் தெரிகிறது.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 25-ம் திகதி
[8-6-70]

**மேஷம்-** கொடுக்கல் வாங்கல்களால் பிணக்குகள் ஏற்படும். நண்பர்களை பகைத்துக்கொள்வீர்கள். வீணை சிந்தனைகளுக்கு இடமளியாது இருக்கவும்.

**ரிஷபம்-** உழைப்பினுல் முன்னேற்றம் ஏற்படும் உயர்கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாக தினம்.

**மிதுனம்-** பலவழிகளிலும் தொல்லைகள் தோன்றும். தொழில்புரியும் இடத்தில் எதிரிகள்மறைமுக நடவடிக்கைகளில் இறங்குவார்கள். அவதானம் வேண்டும்.

**கடகம்-** இலட்சியக்கனவுகள் இன்று கானல்நீராகலாம். உணர்ச்சிவசப்படுவதால் எதிர்பாராத விளைவுகள் ஏற்படும்.

**சிம்மம்-** மனநிறைவுக்கு இடம் உண்டு. தொழில் புரியும் இடத்தில் திருப்தி நிலவும். சிலர் வாழ்க்கையில் இடமாற்றம் ஏற்படலாம்.

**கன்னி-** அந்தஸ்தில் உயர்வு தென்படும். வழக்கு விவகாரங்களில் வெற்றி காணும்.

**துலாம்-** கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும். வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர் சுபதினம்.

**விருச்சிகம்-** வருமானத்தில் திருப்திகரமான நிலை தென்படும், புத்திரர்வழியால் புதினமும் கிடைக்கும்.

**தனுசு-** மனதில் அமைதி குன்றும். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே நன்று.

**மகரம்-** உல்லாசமாகப் பொழுதுபோக்க விரும்புவீர்கள். குழந்தைகளினுல்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 8—6—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ அன்ட் 61 மீ.

மாலை4-25கல்விஒலிபரப்பு 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து இரவு 6-10 மூத்திநெறி, 6-30 கிராமசஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9 30 நாதஸ்வரம்.

## 5 எதிரிகளும் விடுதலை

கோட்டை, ஞாயிறு

கொழும்பு சதாம் வீதி கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் ஐந்து பேரையும் நீதியரசர் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்

நீதியரசர் ஓ. எல். டி கிறெஸ்டர் இவ்வழக்கை விசாரணை செய்தார். ஜூரிமார் வழக்கைத் தொடர்ந்து விசாரணை செய்யத் தேவையில்லை என ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து [illegible] எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

# சிறுபான்மையோர் உரிமைகள் பாதுகாக்கப்படும்

## சுகாதார அமைச்சர் உறுதி

தியத்தலாவ, ஞாயிறு

"கூட்டணி ஆட்சி ஏற்பட்டால் சிறுபான்மையினரின் உரிமைகள் யாவும் நசுக்கப்பட்டுவிடும் என்று முன்னைய அரசாங்கம் பிரசாரம் செய்தது. இம்முறை கூட்டணி கட்சியினர் பெற்ற பெருவெற்றி பெரும்பான்மை மக்களின் வாக்குகளால் மாத்திரமன்று. இப்போதைய மக்கள் ஆட்சி சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு மேற்கொண்டும் பாதுகாப்பு அளிக்கும் என்று நான் உறுதி கூறுகிறேன்.'

இவ்வாறு சுகாதார அமைச்சர் டபிள்யு. பி. ஜி. ஆரியதாஸ கூறினர். பண்டாரவளையில் அமைச்சருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பொன்றின்போது அவர் மேற்கண்டவாறு கூறினர்.

முன்னைய அரசாங்கத்தால் மக்கள் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க முடியவில்லை. எமக்கு முன் பல பிரச்னைகள் இருக்கின்றன இவைகளை காலதாமதமின்றி தீர்த்துவைக்க முயற்சிஎடுப்போம். அடுத்த ஐந்து ஆண்டு காலத்தில் இந்தப் பிரச்னைகள் தீர்க்கப்படாவிட்டால் இந்த அரசாங்கமும் தோல்விகாண நேரிடும் என்று திரு. ஆரியதாஸ குறிப்பிட்டார்.

"எமது அரசு எதிரிகளைப் பழிவாங்காது. என்ருலும் குழப்பங்களை ஏற்படுத்த அவர்கள் முயற்சி எடுக்கிருர்கள். இவர்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பார்கள் என நான்எதிர்பார்க்கிறேன் என்ருர் அமைச்சர்.

# இலங்கை இந்தியர் பற்றி மீண்டும் பேச்சுவார்த்தை?

கோட்டை, ஞாயிறு

இலங்கையிலுள்ள இந்திய இனத்தவர் சம்பந்தமாக விரைவில் இரு அரசாங்கங்களுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்று தெரிகின்றது. சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை மிக விரைவில் நிறைவேற்றிவைக்க புதிய அரசாங்கம் தீர்மானித்திருப்பதே இதற்குக் காரணம் என முன்னைய டட்லி அரசாங்கத்தின் அசமந்தப் போக்கால் ஒப்பந்தம் துரிதமாக செயல்பட முடியவில்லையென்று சிறிமா அரசுகருதுகின்றது.

ஒப்பந்தத்தைஅமுல் நடத்துவது சம்பந்தமாக டட்லி அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய பூரண விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்கா சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம்கேட்டிருக்கிருர்.

இந்த அறிக்கை கிடைத்த பின்னர் மேல் கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பிரதமர் முடிவு செய்வார்.

## '3 வருடத்துக்கு வேலை நிறுத்தம் செய்யாதீர்'

### அரசாங்க சேவை தொழிற் சங்கங்களிடம் கோரிக்கை

கண்டி, ஞாயிறு

'3 வருடகாலத்துக்கு வேலைநிறுத்த நடவடிக்கைகளைத் தவிர்க்கவேண்டும். நாடு தற்போதுநிதி நிலைமையில் மோசமான நிலையில் இருப்பதால் சகல அரசாங்க சேவை தொழிற்சங்க யூனியன்களும் இதுவிடயத்தில் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.'

உயர்நீதிமன்றசுருக்கெழுத்தாளர் சங்க 13-வது ஆண்டுக் கூட்டத்தில் மேற்கூறப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தலைவர் திரு ஆர் எஸ். பெரேரா [illegible] வடிக்கைகளில் ஈடுபடாமல், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஊக்கம் அளிக்கவேண்டும் என்று அரசாங்கசேவை தொழிற் சங்க யூனியன்களிடம் கேட்டுக்கொள்ளுவதென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## தற்காலிக பொலிஸ் நிலையம்

முசலி, ஞாயிறு

[illegible]யடு திருப்பதியில் அடுத்த மாதம் 2-ம் திகதி நடக்கவிருக்கும் திருவிழாவை முன்னிட்டு அங்கு ஒரு தற்காலிக

## பிரேரணை

மாவிட்டபுரம். ஞாயிறு

ஸ்ரீமாவோ அரசாங்கத்துக்கு பாராட்டு தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று சுன்ஞகம் பட்டின சபையில் நிறைவேற்றப்படவிருக்கிறது.

8-ம் வட்டார உறுப்பினர் திரு. இ. இராஜதுரை இதற்கான முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

## அந்தோனியார் திருநாள்

மாவிட்டபுரம், ஞாயிறு

பிரபல்யம் வாய்ந்த புனித அந்தோனியார் ஆலயங்களுள் ஒன்ருன ஊறணி புனித அந்தோனியார் திருநாள் இம்மாதம் 13ம் திகதி நிகழஇருக்கிறது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்ளும் இத்திரு நாளுக்கான ஏற்பாடுகளை காங்கேசன்துறை பட்டின சபையும், சன சமூக நிலையமும் செய்துள்ளது.

இத்திருநாள் நவநாட்கள் தற்போது நடைபெற்றுவருகின்றன. 13ம் திகதி திருநாட் பூசை திருச்சொரூப சுற்றுப்பிரகாரம் ஆகியவற்றுடன் திருநாள் பூர்த்தியடையும்.


KALANILAYA CAMBRIC

கலாநிலய கேம்பிறிக்

WRITING PADS

'லெற்றர் பாட்ஸ்'

நீல, வெள்ளைத் தாள்களில்

கோடிட்ட, கோடிடாத

பெரிய, சிறிய அளவுகளில்

விற்பனைக்குண்டு

மொத்த விற்பனைக்கு தொடர்புகொள்க:

'ஈழநாடு'

(வர்த்தக அச்சகப் பகுதி)

55, சிவன்கோவில் மேற்கு வீதி — யாழ்ப்பாணம்.

சில்லறையாகக் கிடைக்கும் இடம்:-


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(யாழ்ப்பாணம்) நாகேஷ்—வி கே. ராமசாமி
தினசரி 3 காட்சிகள் நடித்த

பெண்ணை வாழ விடுங்கள்

இப்பொழுது திரையிடப்படுகிறது
வின்ஸர்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

★ ஜெய்சங்கர்
★ ஜெயலலிதா
★ நாகேஷ் ★ சுந்தரராஜன்
நடித்த

முத்துச் சிப்பி

இப்பொழுது திரையிடப்படுகிறது
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
நாகேஷ் ரெங்கராவ்
மற்றும் பலர் நடிந்த




துலாம்- மனதில் அமைதி குன்றும். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே நன்று.

**மகரம்-** உல்லாசமாகப் பொழுதுபோக்க விரும்புவீர்கள். குழந்தைகளினால் மகிழ்ச்சி உண்டு. கணவன் மனைவி மத்தியில் அன்பு தவழும்.

**கும்பம்-** போட்டாபோட்டிகளில் ஈடுபடுவதன் மூலம் பணம் பாழாகலாம். விவசாயிகளாயின் இன்று கடன்பட நேரிடலாம்.

**மீனம்-** மற்றவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவீர்கள். பெரிய மனிதர்களின் உறவு தாராளமாகக் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றியுண்டு.

சோதிடக் கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - பத்மினி
நடித்த
புனர் ஜென்மம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
[போயா, பிரிபோயா 2-30]
கிங்கொங்
(KING KONG)
(English)

ராஜா (யாழ்ப்பாணம்)
Daily 3 Shows
Bobby Darin,
Emily Bank's
in
GUN FIGHT
IN
ABILENE
(cinema scope & color,

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p. m.
Client East-wood
in
FIST FULL
OF DOLLARS
(Scope-color)

REGAL JAFFNA
Daily 3 Shows
Poya Prepoya 4 Shows
Hayley Mills
in
THAT DARN CAT

...ார் வழக்கைத் தொடர்ந்து விசாரணை செய்யத் தேவையில்லை என ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

பாணந்துறை, நல்லுறவ சாராயத் தவறணை ஒப்பந்தக்காரர் ஏச். எஸ். ரூபின் பொன்சேகா என்பவரைக் கொலை செய்ததாக இவர்கள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

— —

## புதிய நியமனம்

கோட்டை, ஞாயிறு

வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னைய தலைவரும் ஊட்டச்சத்து நிபுணருமான டாக்டர் ஆனந்தவிமலசூரியா பொது சேவைக் கமிஷனின் தலைவராக நியமனம் பெற்றுள்ளார்.

திருமதி பண்டாரநாயக்காவின் முன்னைய அரசாங்கத்தில் இவர் பொதுச் சேவைக் கமிஷனின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

மேற்படி கமிஷனின் மற்றுமிரு அங்கத்தவர்களாக ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியான திரு. டபிள்யூ. ஈ. அபேகோனும். ஓய்வு பெற்ற கல்வி மா அதிபரான திரு. இ. ஏச் டி. அல்விசும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

— —

## இவர்கள் நியமனம்

கொழும்பு, ஞாயிறு

அரசாங்க ஊழியர் சேவைக் கமிசனின் புதிய அங்கத்தவர்களாக டாக்டர் ஆனந்த நிமலசூரிய, திரு. டபிள்யூ. ஏ. அபயக்கோன், ஈ. ஏச். டீ. அல்விஸ் ஆகிய மூவரும் தெரிவு செய்யப் படலாம்.

திரு. செனிவரத்ன, திரு. ஏ. எம். ஏ அசீஸ் ஆகியோர் இராஜினாமாச் செய்த இடங்களுக்கே இவர்கள் நியமிக்கப்பட வுள்ளனர்.

— —

## 750 லட்சம் ரூபா கிடைக்கும்

கொழும்பு, ஞாயிறு

பொதுச் சந்தையில் றப்பரை ஸ்ரேறில் டொலரில் விற்பனவு செய்வதற்கு சீனாவுடனும் போலாந்துடனும் இலங்கை பேச்சுவார்த்தை நடத்துகின்றது.

இப்பேச்சுவார்த்தை வெற்றி அளிக்குமானால், தற்போதைய நிதிப்பற்றாக் குறையை சமாளிப்பதற்கு 750 லட்சம் ரூபா இலங்கைக்குக் கிடைக்கும். (சி.பி.ஏ)

...வேண்டும்.'

உயர்நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் சங்க 13-வது ஆண்டுக் கூட்டத்தில் மேற்கூறப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தலைவர் திரு ஆர் எஸ். பெரேரா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

குறைந்தது 3 வருடங்களுக்கு வேலை நிறுத்தநட...

---

அமைச்சர்கள்

## காலை 8.30 மணிக்கு முன்னரே காரியாலயம் சென்றனர்

கோட்டை, ஞாயிறு

அமைச்சர்கள் யாவரும் தங்கள் காரியாலயத்தில் காலை 8-30 மணிக்கு இருக்க வேண்டுமெனப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்திருந்தார்.

பிரதமரின் இந்த உத்தரவுக்குப் பின்னர் அமைச்சர்கள் காலை 8-30 மணிக்கு முன்னரே தங்கள் காரியாலயங்களுக்குச் சென்றனர்.

நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவே தனது காரியாலயத்துக்கு முதலில் சென்ற அமைச்சராவர்.

— —

## விவசாயவீரர்கள் கவலை

ஒட்டுசுட்டான், ஞாயிறு

நடந்து முடிந்த பொதுத் தேர்தலை முன்னிட்டு தத்தமது இல்லங்களுக்கு அனுப்பப்பட்ட விவசாயப்படை வீரர்கள் இதுவரை முகாமுக்குத்திருப்பி அழைக்கப் படாதது பற்றி வீரர்கள் கவலை கொண்டுள்ளனர். வடபிரதேசத்தைச் சேர்ந்த வீரர்கள் தமது தொகுதி எம். பிக்களைச் சந்தித்து நிலைமையை விளக்கி இது விஷயத்தில் ஆவன செய்யுமாறு கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

—

## இடமாற்றம்

ஒட்டுசுட்டான், ஞாயிறு

சென்ற மூன்று மாதங்களாக ஓவசியர்களாகப் பயிற்சி முகாமில் பயிற்றப்பட்ட விவசாயப்படை உத்தியோகஸ்தர்கள் இம்மாதம் 1-ம்திகதி தொடக்கம் ஒட்டுசுட்டான் வி. ப. முகாமிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் அ. சிவஞானசுந்தரம் தா. சோமசுந்தரம், ம. சின்னையா, கே. லட்சுமிகாந்தன் பீ. பாலநாயகம், இ. பாலசுப்பிரமணியம், சுஜேந்திரன், சா. சண்முகவேலாயுதம் ஆகியோரே பயிற்சி பெற்று இடமாற்றம் பெற்றவர்களாவர்.

...

## பொலிஸ் நிலையம்

முசலி, ஞாயிறு

...யடு திருப்பதியில் அடுத்த மாதம் 2-ம் திகதி நடக்கவிருக்கும் திருவிழாவை முன்னிட்டு அங்கு ஒரு தற்காலிக பொலிஸ் நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. மன்னார் மாவட்ட பொலிஸ் அதிகாரி திரு. எம். ஈ. பி. எல். பெரேரா இதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளார் இந்தத் தற்காலிக பொலிஸ் நிலையம் இம்மாதம் 20ம் திகதி பெரும்பாலும் திறக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

55, சிவன்கோவில் மேற்கு வீதி — யாழ்ப்பாணம்.

சில்லறையாகக் கிடைக்கும் இடம்:-

யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம்

420, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.

புதிய
ஹெடோனல் 'எம்'
40% எம். சி. பி. ஏ. மற்றும் சோடியம், பொட்டாசியம் ஆகிய உப்பு அடங்கிய களை கொல்லி.

பயிர்க் கொல்லி
களை விட்டு
வைக்காமல்
வேரோ
டொழிக்கும்,
உறுதியாக
அதிக லாபம்
தரும்.




விளைபொருள்களை உறுதுணை நின்று காக்கும் ஹெடோனல் 'எம்',
நெல், கரும்பு, சோளம், மற்றும் புற்றரைகளைப் பாதிக்கும் அகன்ற இலைக்களைகளையும், புதர்ச் செடிகளையும் செப்பமாகவும் சிக்கனமாகவும் ஒழித்துவிடும்.
பயிர்களையும் பண லாபத்தையும் பாதுகாக்கப் பாவியுங்கள்
ஹெடோனல் 'எம்'.
நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள் !

மூலப் பொருட்சத்து உற்பத்தியாளர் : பேயர் ஜெர்மனி
இலங்கையில் தயாரிப்போர் : ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

P-9246

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம்பென்னுக்கருகில்

# கம்போடிய முக்கிய நகரம் வியட்காங்கிடம் வீழ்ச்சி?

# தலைநகரிலிருந்து மேலதிக படைகள் விரைகின்றன

நாம்பென், ஜூன் 7

கம்போடிய அரசுபடைகளின் புதிய அணிகள் கம்போடிய தலைநகரின் அருகிலுள்ள சீயாம்ரியாத் என்ற சுற்றுலாநகரை நோக்கி விரைந்து அனுப்பப்படுகின்றன.

நாம்பென்னிலிருந்து சுமார் 140 மைல் தொலைவிலிருக்கும் இந்தச் சுற்றுலா நகர் வியட்காங்கியரிடம் வீழ்ச்சியுற்றுக் கொண்டிருப்பதின் காரணமாக தலைநகரிலிருந்து மேலதிக அணிகள் அங்கு விரைகின்றன. சியாம்ரியாத் என்ற அந்த நகரின் விமானத்தளம் ஏற்கனவே கம்யூனிஸ்ட்டுகள் வசமாகிவிட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இதேசமயம் கம்போடியாவின் 'ஆம்லியான் என்ற இன்னொரு முக்கிய நகரமும் ஏற்கனவே கம்யூனிஸ்ட்டுகளின் வசமாகிவிட்டதாக அறியப்படுகின்றது.

தென்வியட்னும் விமானப் படை உதவிகளையும் கம்போடியா கோரியிருப்பதாகத் தெரிகின்றது.

நேற்று முதல்தடவையாக தென்வியட்னும் படைகளும் கம்போடிய படைகளும் ஒன்றுசேர்ந்து வியட்காங்கியரின் இரகசிய முகாம்களைத் தேடிச்சென்று தாக்குதல் நடத்தினார்கள். இதில் 44 சிப்பாய்களும் 2 கொரில்லாக்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

### தலைநகரில் இரு சம்பவம்

கம்போடிய தலைநகரான நாம்பென்னில் முதல்தடவையாக இரு சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் துப்பாக்கியால் சுட்டு மூன்று சிப்பாய்களைக் கொன்றுவிட்டார். பாதுகாப்பு அமைச்சுக்கருகில் இது நடந்தது. சீன தூதரகத்துக்கருகில் குண்டு ஒன்று வெடித்ததில் மூவர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்திருக்கிறார்கள்.

### நிக்ஸன் அனுப்பிய தூதுக்குழு

அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் கம்போடிய நிலைமைகளை நேரில் அறிந்து வருவதற்காக அனுப்பிய தூதுக்குழு கம்போடியாவுக்கு வந்து சேர்ந்துள்ளது. கைப்பற்றப்பட்டுள்ளவியட்காங்கியரின் மறைவிடங்களை இந்தத் தூதுக்குழு பார்வையிடும்.

தென்வியட்னுமில் நேற்று அமெரிக்க ஹெலிகோப்டர் ஒன்று தவறுதலாக நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று அமெரிக்கர்களும் இரண்டு வியட்னும் சிப்பாய்களும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### யூகோ - ஹங்கேரி கூட்டுக் கோரிக்கை

கம்போடியாவிலும் லாவோஸிலும், தென்வியட்னுமிலும் உள்ள அமெரிக்க துருப்புகள் வெளியேற வேண்டும் என்று யூகோஸ்லாவியாவும் ஹங்கேரியும் கூட்டாக வற்புறுத்தியுள்ளன. இந்த நாடுகளின் மக்கள் தம் தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக் கொள்ள வசதியளிக்கப்பட வேண்டும் என்று யூகோஸ்லாவியாவும் ஹங்கேரியும் வற்புறுத்தியுள்ளன.

## சோயுஸ் 9க்கு ஆம்ஸ்ட்ரோங் பாராட்டு

மாஸ்கோ, ஜூன் 7

பூமியின் வளத்துக்கான ஆதாரங்களை ஆராய்வதை அடிப்படைப் பணியாகக் கொண்டுள்ள சொயுஸ்-9 விண்வெளிக் கலத்தில் பணி மிகவும் பயனுடையது.

இவ்வாறு அப்பலோ விண்வெளிக் கலத்தில் சென்று முதலில் அம்புலியில் கால் வைத்த மனிதன் என பாராட்டப்படும் நீல்ஆம்ஸ்ட்ரோங் ரஷ்ய சோயுஸ்-9 விண்வெளிக் கலத்தைப் பாராட்டிக் கூறினார்.

சோயுஸ்-9 விண்வெளிக் கலத்தில் ரஷ்ய விண்வெளி வீரர்கள் நிக்கோலயேவ், விடாலி செபாஸ்டியானேவ் ஆகிய இருவரும் விஞ்ஞான பரிசோதனைகளையும் மருத்துவ பரிசோதனைகளையும் செய்து கொண்டு விண்வெளியைச் சுற்றி வருகின்றனர்.

விண்வெளிக்கலம் உலகை 30-வது முறை சுற்றிவந்தது என அறிவித்துள்ளனர்.

உலகத்தைப் புகைப்படம் எடுத்ததாகவும் விண்வெளிக் கலத்தின் புதுக் கருவிகளை பரீட்சித்துப் பார்த்ததாகவும் ரஷ்ய அவதான நிலையத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

— —

## பிரதமருக்கு வாழ்த்து

தாவடி, ஞாயிறு

பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயவுக்கு, தாவடி மத்திய சன சமூக நிலையம், ஸ்ரீகணேச இலவச வாசிகசாலை, பொது சன நூல்நிலையம் என்பனவற்றின் சார்

## இந்திய படத்திற்கு முதற் பரிசு

பிரெஸில், ஜூன் 7

பிரெஸில் நாட்டில் இடம்பெற்ற விஞ்ஞான வரலாற்றுப்பட விழாவில் இந்தியா முதல் பரிசைப் பெற்றிருக்கின்றது. அமெரிக்கா இரண்டாவது இடத்தையும் பிரான்ஸ் மூன்றுமிடத்தையும் பெற்றுள்ளன.

இந்திய செய்திப்படத் துறையினுல் தயாரிக்கப்பட்ட 'லைஃப்' என்ற படத்திற்கே முதலிடம் கிடைத்திருக்கின்றது.

## வெடி விபத்தில் 26 பேர் பலி

கராச்சி, ஜூன் 7

பாகிஸ்தானில் கராச்சிக்கருகாமையில் நிலக்கரி சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 26 பேர் பலியாகியிருக்கின்றனர். கரிச்சுரங்கத்தில் தீ விபத்து ஏற்பட்டபோது அதனை அணைப்பதற்கு முயற்தி எடுத்தபோது இச்சம்பவம் ஏற்பட்டது. இறந்தவர்கள் அனைவரும் ஓர் அறையில் இருந்ததாகவும் அங்கிருந்த வெடிமருந்துகள் வெடித்ததினுல் இவர்கள் பலியானதாகவும் கூறப்படுகின்றது

— —

## இந்திரா திரும்பினுர்

புதுடில்லி, ஜூன் 7

மொரிஸியஸ் தீவில் 5 நாட்கள் நல்லெண்ணச் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி நேற்றிரவு தலைநகர் வந்து சேர்ந்தார்.

முக்கிய பிரமுகர்களும் மந்திரிகளும் அவரைவிமான நிலையத்தில் வரவேற்றனர்.

## தாவடியில் தேநீர்க் கடைப் பிரவேசம்

## பெருவில் நிவாரணம்: 1 கோடிடாலர் யு.எஸ் உதவி

லீமா, ஜூன் 7

பெருவில் பூகம்பத்தினுல் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு பெரு முயற்சிகளின் பின்னர் முதல் நிவாரண உதவிகள் போய்ச் சேர்ந்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

சரித்திரத்திலேயே இதுவரை கண்டிராத மிகப் பெரிய இயற்கை அழிவுக்குள்ளான பெரு நாட்டுக்கு அமெரிக்க அரசாங்கம் ஒரு கோடி 10 லட்சம் டாலர் இதுவரை உதவியாக வழங்கியிருக்கின்றது.

இடிபாடுகளிலும் சகதியிலும், மலைச்சரிவுகளிலும் புதையுண்டு கிடக்கும் பிணங்களை இன்னும் தோண்டி எடுத்தபடி இருக்கிறார்கள். பிணங்கள் குவிக்கப்பட்டு தகனம் செய்யப்படுகின்றன. தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

உறவினர்களையும், பெற்றோர்களையும் இழந்த குழந்தைகளின் பராமரிப்புக்கான ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

இரண்டாவது உலகயுத்தத்தின் போது ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டதினுல் ஏற்பட்டதைவிட இப்பூகம்பத்தினுல் அழிவுகள் அதிகம் ஏற்பட்டிருப்பதாக பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

## ஆழ்கடல் மர்மத்தை அறிய விஞ்ஞானிகள் முயற்சி

பொன், ஜூன் 7

ஆழ்கடலின் மர்மங்களை அறியும் முயற்சியில் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு விஞ்ஞானிகள் தீவிரமாக இறங்கியுள்ளனர். 'பிளனட்' என்ற ஜெர்மன் ஆராய்ச்சிக் கப்பல், ஆழகடல்ஆராய்ச்சியில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது. அஜோர்தீவு அருகே கடலில் மூன்று எரிமலைகளின்கூம்புகளில், 300 முதல்800 மீட்டர் ஆழம்வரை 'கோபுரங்களை' கட்ட விஞ்ஞானிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பலவித நுண்ணிய கருவிகள் அடங்கியதுதான் இக்கோபுரங்கள். கடலுக்குள் ஓடுகிற நீரோட்டங்களின் போக்கு, சமிக்ஞைகளின் போக்கில் இதனுல் ஏற்படும் மாறுதல் குறித்து நுண்ணிய கருவிகள் பதிவு செய்யும்

இதுவரை நம்பிவந்ததைவிட பலமடங்கு அதிகமாகவே கடலின்போக்கு மாறுபட்டு வந்திருக்கிறது என பதை சமீப ஆண்டுகளில் விஞ்ஞானம் கண்டுபிடித்திருக்கிறது. கடலின் மேற்பரப்பில் அலைகள் இருப்பது ஒருபுறமிருக்க, கடலுக்குள்ளாகவே அலைகள் இருக்கின்றன. உள்கடல் அலைகள் குறித்துஇன்னும் விவரமான தகவல்கள் கிடைக்கவில்லை. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு விதமாக, கடலில் ஒரு மட்டத்திற்கு கீழாக இந்த அலைகள் பெரியதாகவும் சிறியதாகவும் வீசுகின்றன. கடலுக்குள் மீன்கள் குவிந்திருக்கிற இடங்களில் கண்டுபிடிக்க ஒலி சமிக்ஞைகளை அனுப்புவார்கள். உள்கடல் அலைகளின் போக்கில் இந்த ஒலி சமிக்ஞைகள் ஓரளவு சிதறுகின்றன. நீர்மூழ்கிக்கப்பல்களிலிருந்து அனுப்பப்படுகின்ற சமிக்ஞைகளும் பாதிக்கப்படுகின்றன ஆனுல் எந்த அளவுக்கு எந்த விதத்தில் பாதிக்கப்படுகின்றன என்பது நீண்டகாலமாகப் புரியாமலிருந்தது.

## எம்.பிக்களின் சேவையை கல்வித்துறையில் பயன்படுத்துக

பருத்தித்துறை ஞாயிறு

'ஆசிரியர் அரசியலைப் பொறுத்தவரையில் ஒடும் புளியம்பழமும் போன்று இருக்கவேண்டும். அரசியல் வாதிகளுக்குக் கட[illegible]ப்படாதிருக்கும் அதே[illegible]ளையில் பாராளுமன்ற உறுப்பினரின் சேவையைக் கல்வித்துறையின் ஆக்கபூர்வமான அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டு[illegible] நீதிபரிபாலனத் து[illegible]ற

## ஒருநாள் சம்பளம் வழங்க முடிவு

அவிசாவளை, சனி

அவிசாவளை சென் மேரிஸ் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்களும், ஊழியர்களும் தங்களது ஒருநாள் சம்பளத்தை அரசாங்கத்துக்குநன்கொடையாக வழங்க முடிவு செய்

## தொழிற்கட்சி பதவிக்கு வருவது நிச்சயம்; ஆனுல்...

லண்டன், ஜூன்.7

இம் மாதம் 18ம் திகதி இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி பெரும்பான்மை பலம்பெற்று பதவிக்கு வரக்கூடும் என்று அபிப்பிராயக் கணிப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

தொழிற்கட்சிக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இதே வேளையில் பிரதம மந்திரி திரு ஹரோல்ட் வில்சன் பெரும் எதிர்ப்புக்களையும் சமாளிக்கவேண்டியிருக்கின்றது. பத்திரிகைத் துறையிலும், சுகாதாரத் துறையிலும் உள்ள ஊழியர்கள் பொது வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளப் போவதாகப் பயமுறுத்தி வருகிறார்கள்.

டாக்டர்களுக்கு 30 சதவீதம் சம்பள உயர்வு கோரி சுகாதாரத்துறை யூனியன்கள் பல கோரிக்கை விடுத்துள்ளன. இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படா விட்டால் பொது வேலை நிறுத்தத்தில் குதிக்க அவர்கள் முடிவு செய்துள்ளனர். இதே வேளையில் தேசிய பத்திரிகைத் துறையில் உள்ளவர்களும் பொதுவேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளப் போவதாகவும் பயமுறுத்தியிருக்கின்றனர். இவைகளைப் பிரதமமந்திரி ஹரோல்ட் வில்சன் எப்படி சமாளிக்கிறரோ அதில்தான் அவரதுவெற்றி தங்கியிருக்கிறது என்றும் கூறப்படுகின்றது.

## 'திரு. கா. பொ இரத்தினம் ஒரு பொதுவுடைமை வாதி'

### வரவேற்பு விழாவில் பாராட்டு

வேலணை, ஞாயிறு

''பண்டிதர் கா. பொ. இரத்தினம் சமதர்மக் கொள்கையுடையவர். திருக்குறளுக்கு அகில உலகிலும் விழா எடுக்கச்செய்து அதன்மூலம் வள்ளுவரின் சமதர்மக்கொள்கையை மக்களிடையே பரவச்செய்தார், சாதிப்பாகுபாடு தமிழினத்துக்குச் சாபக்கேடு என்பதை அவர் பல ஆண்டுகளுக்கு முன்பு மக்களின் கவனத்துக்குக் கொண்டுவந்தவர். இந்தக்கிராமத்திலே தீண்டாதோர் ஆலயத்தில் அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை 20 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் மத்தியில் எடுத்துக் கூறினுர். இக்காரணத்தால் இத்தொகுதியின் சிறுபான்மை மக்களின் ஏகோபித்த ஆதரவு கிடைக்கக்கூடியதாக இருந்தது''

வேலணை 1-ம், 2-ம் வட்டார மக்கள் சார்பில் தீவுப் பகுதி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்திற்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்திற்குத் தலைமை வகித்துப்பேசிய திரு. சி. இராசரத்தினம் கூறினுர்.

திரு. கா. பொ. வுக்குக் கிடைத்தவெற்றி அவரது சமதர்மக் கொள்கைக்கும் சேவைக்கும் தமிழ் ஆர்வத்துக்கும் கிடைத்த பரிசு என தலைவர்சொன்னுர்.

கூட்டம்ஆரம்பமாவதற்கு முன் வரவேற்புக்குழுத் தலைவர் திரு எஸ். கனகரத்தினம் தலைமையில் எம் பி. திரு. இரத்தினம் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

திரு. கா. பொ. இரத்தினம் நன்றி தெரிவித்துப் பேசுகையில் தொகுதியின் தேவைகளை அறிந்து பாரபட்சமெதுவுமின்றிச் சேவையாற்றுவதே தமதுஇலட்சியமென்றூர்.

———

## மாவை ஆலய கும்பாபிஷேகம்

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் 8-வது கும்பாபிஷேகம்இம்மாதம் 14ந்திகதி அதிகாலை நடைபெறவிருக்கிறது.

பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், சென்றவருட உற்சவத்தை அடுத்து திருப்பணி வேலைகளுக்காக வாலஸ்தாபனம் செய்யப்பட்டு இது காலம் வரை திருப்பணி வேலைகள்

## லெனின் பற்றிய வானெலிப் போட்டி

பெர்லின், ஜூன் 7

## பனிப்பாறை தாக்கி மலையேறும் வீரர் பலி

புதுடில்லி, ஜூன் 7

ருந்தனர். பனிப்புகாரினல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார் சைக்கிளில் வந்த ஒரு

# பனிப்பாறை தாக்கி மலையேறும் வீரர் பலி

புதுடில்லி, ஜூன் 7

21,690 அடி உயரமுள்ள நந்தகட் சிகரத்தில் ஏறிய மலையேறும் கோஷ்டியைச் சேர்ந்த இருவர் பனிப்பாறைச் சரிவில் அகப்பட்டு மாண்டனர்.

பம்பாயைச் சேர்ந்த கிர்விகார் என்ற ஸ்தாபனத்தைச் சேர்ந்த மலையேறும் கோஷ்டி ஒன்று மேமாதம் 17-ம் திகதி பம்பாயிலிருந்து புறப் ட்டது.

கோஷ்டி தங்கியிருந்த இரண்டாவது முகாமைப் பனிப்பாறை தாக்கியதனுலேயே இக்கோஷ்டியைச் சேர்ந்த இருவர் மரணத்துக்குள்ளாகினர்.

டி. ஸி. சுரோரா என்பவருடன் 12 பேர்கள் இக்கோஷ்டியில் இடம்பெற்றிருந்தனர். பனிப்புகாரினுல் கொல்லப்பட்டவர்கள் டி. ஸி. சுரோரா, ஆர். எஸ். பிரபு என்போராவர். எஸ். கே. தேசாய். ஆர். ஜி. கபாடியா ஆகிய இருவரும் காயத்துக்குள்ளாகினர்.

மரணமடைந்த இருவரது சடலங்களையும் ஏனையோர்கள் மிகச் சிரமத்துடன் சுமந்து தாம் முதலில் தங்கியிருந்த முகாமுக்குக் கொண்டுவந்து புதைத்தனர்.

இந்த விபத்தைத் தொடர்ந்து மலையேறும் முயற்சி கைவிடப்பட்டது. உயிர்தப்பியவர்களை மீட்பதற்காக ஹெலிகோப்டர் விமனங்களை அனுப்பிவைக்குமாறு உத்தரப்பிரதேச அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது.

# 'வேலையில்லாப் பிரச்னையை போக்க உழைப்பேன்'

மட்டுவில், ஞாயிறு

இன்றைய வாலிபர்களின் மத்தியிலே ஒரு சாபக்கேடாக அமைந்துள்ளவேலையில்லாத் திண்டாட்டத்தை ஆட்சிமன்ற உறுப்பினராகத் தெரியப்படாத பட்சத்திலும் தனித்து நின்று தீர்த்து வைப்பதில் நான் பெரிதும் அக்கறை காட்டுவதென தீர்மானித்துள்ளேன்.'

'நான் அன்றே மேடைகளில் கூறியதின்படி கைத்தொழில் அபிவிருத்திகளை இந்த நாட்டில் உருவாக்க வேண்டும் அதன் மூலமே இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் எனவே இங்கு ஒரு கைத்தொழில் ஸ்தாபனமான கண்ணாடித் தொழிற்சாலையை உருவாக்கலாம் என்பது எனது திட்டம்.''

இவ்வாறு சாவகச்சேரியில் கடந்த பொதுத்தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்ட திரு வி. குமாரசாமி சாவகச்சேரி வாலிப முன்னணிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர். திரு ஆ. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் திரு. குமாரசாமி மேலும் பேசியதாவது:-

— —

## புதிய அதிபர்களும் இட மாற்றங்களும்

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி உதவி அதிபர் திருமதி பார்வதவர்த்தனி சிவசங்கரம் மானிப்பாய் இந்து மகளிர் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். மன்னுர் வட்டாரக் கல்வியதிகாரி திரு. கே. குணரத்தினம் இடைக்காடு இந்துக்கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்

கனகராயன்குளம் மகாவித்தியாலய உதவி அதிபர் திரு. பீ. கணேசன் கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். திரு. பீ. எம். மனுவேற்பிள்ளை உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திலிருந்து கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்குமாற்றப் பட்டுள்ளார்.

## சந்தேகநபர் சரண்

யாழ்ப்பாணம், திங்கள்

அரியாலையில் நடைபெற்ற கொலை சம்பந்தமாகத் தேடப்பட்டுவந்த கு. சின்னத்தம்பி என்பவர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் சரணடைந்தார்

இம்மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை நடாத்திய அதிகாரிதிரு எஸ். கனகரத்தினம் கொலைஎனத் தீர்ப்பளித்து, சந்தேக நபரைக் கைது செய்யும்படி பிடிவிருந்தும் பிறப்பித்திருந்தார்(கு. வி. ம)

தாவடி. ஞாயிறு

பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயவுக்கு, தாவடி மத்திய சன சமூக நிலையம், ஸ்ரீகணேச இலவச வாசிகசாலை, பொது சன நூல்நிலையம் என்பனவற்றின் சார்பில் சன சமூக நிலையத் தலைவர் திரு. சி. செல்வரத்தினம் ஆசிச்செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்

இலங்கைவாழ் சகல மக்களும் இன, மத, மொழி பிரதேச வேறுபாடின்றி ஒவ்வொருவருடையசுயநிர்ணய உரிமையையும் பாதுகாத்து சிறந்த ஆட்சி புரிவீர்கள் என எதிர்பார்க்கிறோம் என்று ஆசிச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

— —

## மன்னுர் அரசாங்க அதிபர் வேண்டுகோள்

முசலி- ஞாயிறு

மன்னுர் மாவட்டத்தில் காணி ஆணையாளருடைய நிதியைக்கொண்டு கட்டிட வேலைகள் பாதைகள் அமைத்தல் ஆகியனவற்றிற்கு ஒப்பந்தங்கள் செய்ய விரும்புவோர் மன்னுர் அரசாங்க அதிபருடன் பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்,

விண்ணப்பக்காரர் பணவசதி உள்ளவராயும் அமைப்பு வேலைகளில் அனுபவம் உள்ளவராயும் தொழில் நுட்ப ஆற்றலும் போதிய வேலையாட்களும் பண்டங்களும் உள்ளவராகவும் இருக்க வேண்டுமென்று குறிக்கப்பட்டிருக்கிறது.

— —

## ஒளிமயமான எதிர்காலம் நிச்சயம்

உடுப்பிட்டி, ஞாயிறு

''தென்னிலங்கை முற்போக்குச் சக்திகளுடன் ஒன்றிணைந்தால் சிறுபான்மைச் சமூகத்திற்கு விடுதலை கிடைக்கும் என்ற திடநம்பிக்கை யுள்ளவரான 'எம். ஸி' ஸ்ரீமா அரசாங்கத்தில் நியமன எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டதால் எமது சமூகத்திற்கு ஒளிமயமான எதிர்காலம் நிச்சயமாகிவிட்டது.''

இவ்வாறு கரவெட்டி மேற்கு மத்தொனி திருவள்ளுவர் சனசமூகநிலையச்செயலாளர் திரு. க. நாகமுத்து அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். ஸி, சுப்பிரமணியம் புதிய நியமன எம். பியாகத் தெரிவு செய்பட்டதற்குப் பாராட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி

மூகிய பிரமுகர்களும் மந்திரிகளும் அவரைவிமான நிலையத்தில் வரவேற்றனர்.

— —

## தாவடியில் தேநீர்க்கடைப் பிரவேசம்

யாழ்ப்பாணம், திங்கள்

தீண்டாமைஒழிப்பு வெகுஜன இயக்க தாவடிக் கிளையைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் தாவடிச் சந்தியிலுள்ள தேநீர்க்கடைகளிலும், சிகைஅலங்கரிப்பு நிலையத்திலும் பிரவேசம் செய்தனர். கடைக்காரர்கள் எவ்வித பாகுபாடுமின்றித் தேநீர்வழங்கினர். இப்பிரவேசத்திற்கு இயக்கக் கிளையைச் சேர்ந்த திருவாளர்கள் வே. அரியகுட்டி, மு. இரத்தினம் ஆகியோர் தலைமைதாங்கினர். தமக்கு ஆதரவுதந்த சகல தேநீர்க்கடைச் சொந்தக்காரருக்கும் இவர்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

— —

### நெல்லியடியில்

## தேநீர்க்கடைப் பிரவேசம்

பருத்தித்துறை, ஞாயிறு

நெல்லியடிப் பகுதியில் இவ்வாண்டு இரண்டாவது தடவையாக தேநீர்க்கடைகள் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குத் திறந்துவிடப்பட்டன. திரளான சிறுபான்மைத் தமிழ்மக்கள் இதிற் கலந்துகொண்டனர்.

— —

## எம். ஸிக்கு பாராட்டு

கொழும்புத்துறை, ஞாயிறு

சமூகத்தில ஒடுக்கப்பட்டவர்கள் மத்தியில் நின்று அவர்களின் விமோசனத்திற்காக அல்லும்பகலும் அயராது உழைத்த தங்கள் சேவையைப் பாராட்டுகிறோம். மேலும் தங்கள் சேவைவளர தங்களை மனதார வாழ்த்துகிறோம்.

இவ்வாறு, கொழும்புத்துறை மத்திய சனசமூகநிலையத்தினர் புதிய அரசாங்கத்தில் எம். பியாக நியமனம் பெற்ற திரு எம். ஸி, சுப்பிரமணியத்திற்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ளனர்.

யில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. 'எம். ஸி.'யை நியமன ஆட்சிமன்ற உறுப்பினராகநியமித்ததற்காகப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும் அவர் நன்றிதெரிவித்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

படாதிருக்கும் அதே [illegible]யில் பாராளுமன்ற உறுப்பினரின் சேவையைக் கல்வித்துறையின் ஆக்கபூர்வமான அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டு[illegible]

நீதிபரிபாலனத் து[illegible]றையைப் போல சுதந்திரமும் கண்ணியமும் கடமையுணர்ச்சியும் கொண்டு ஆசிரியருலகம் தன்மானத்துடன் இயங்க அரசியல்வாதிகளும் ஒத்துழைக்கவேண்டும்.'

இவ்வாறு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விசேட பயிற்சிப் பழைய மாணவர் சங்க ஆண்டுவிழாவில் பேசுகையில் எஸ். சுந்தரராஜன் கூறினுர்.

திரு என், தேவபாலசுந்தரம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் கணிதப் பேராசிரியர் திரு ஆர். ஜே. ஈ. சேதுகாவலர், அதிபர் திரு ஜி. என். எட்வேட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

— —

## ஆ.ப.அ.சபை தலைவர்கள் ராஜினுமா

கோட்டை ஞாயிறு

ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு எம். ஜே. பெரேராவும் மற்றும் டாக்டர் ஜவன் சமரவீரா, திரு எல் எல் அட்டிகலை ஆகிய இரு அதிபர்களும் தங்கள் ராஜினுமாக்களை நீர்ப்பாசன அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவிடம் நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளனர்.

ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபைக்கு புதிய அதிபர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள்.

அவிசாவளை செண் மேரிஸ் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்களும், ஊழியர்களும் தங்களது ஒருநாள் சம்பளத்தை அரசாங்கத்துக்குநன்கொடையாக வழங்க முடிவு செய்துள்ளனர்.

புதிய அரசாங்கம் பதவியைப் பொறுப்பேற்ற போது நாட்டின் நிதி நிலைமை மிக மோசமாகவிருப்பதாக நிதி அமைச்சர் தெரிவித்ததைத் தொடர்ந்து, நல்லெண்ண அறிகுறியாக இந்த முடிவுக்கு ஆசிரியர்கள் வந்துள்ளனர். தங்களது இவ்வித தீர்மானத்தை சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு இவர்கள் தெரிவித்தனர்

— —

## ஆராயப்படும்

பருத்தித்துறை, ஞாயிறு

இருமுறை பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் புதிய கல்வி அமைச்சருக்கு வாழ்த்துச் செய்தியனுப்புவதும், அவரை வடபகுதிக்கு வரவழைப்பதும் பற்றிய தீர்மானங்கள் விவாதிக்கப்படுமென்று தெரிகிறது.

— —

## மஹோற்சவம்

உடும்பராய், திங்கள்

இணுவில் அம்பலவாணக் கந்தசுவாமிகோயில் மஹோற்சவம் இம்மாதம் 9ம் திகதி கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகின்றது. இருபத்தைந்து நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் வருகிற மாதம் 2-ம் திகதி காலை தேர்த்திருவிழாவும், 3-ம் திகதி பிற்பகல் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## லெனின் பற்றிய வானொலிப் போட்டி

பெர்லின், ஜூன் 7

சில சோஷலிஸ்ட் நாடுகளின் வானொலி நிலையங்கள் நடத்திய சர்வதேசிய லெனின் நூற்றுண்டுவிழாப் போட்டியில் 100 நாடுகளைச் சேர்ந்த வானொலி ரசிகர்கள் சுமார் 17,000 பேர் பங்கு பற்றினர். 7 முதற் பரிசுகளில் ஒன்று சியொராலியோனைச் சேர்ந்த முகமத் எல். கிம்போ என்பவருக்குக் கிடைத்தது.

லெனின் பெயரை எந்தச் சந்தர்ப்பத்தில் எப்பொழுது தெரிந்துகொண்டீர்? உங்களுக்கு லெனினுல் இன்று கிடைக்கும் பயன் என்ன? என்ற கேள்விகளை ஏழு சோஷலிஸ்ட் நாடுகள் வானொலி நிலையங்கள் ரசிகர்களிடம் கேட்டன.

— —

## 30 கோடி மரங்கள்

பெர்லின், ஜூன் 7

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசிலுள்ள சுமார் 40,000 வன பாதுகாப்பு இலாகா ஊழியர்கள் 75,000 ஏக்கரில் 30 கோடி மரங்களை நடும் வன மகோற்சவத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஆண்டுதோறும் சுமார் 60 இலட்சம் கன மீட்டர் மரம் நாட்டுக்குத்தேவைப்படுகிறது. இந்த மரத்தில் 90 வீதத்துக்கு மேல் தொழில்களுக்காக அதாவது: கடுதாசி, செலுலோஸ், தளபாடச் சாமான்கள் ஆகியவற்றின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்றது.

பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், சென்றவருட உற்சவத்தை அடுத்து திருப்பணி வேலைகளுக்காக வாலஸ்தாபனம் செய்யப்பட்டு இது காலம் வரை திருப்பணி வேலைகள் நடைபெற்றன திட்டமிட்டபடி திருப்பணிவேலைகள் பூர்த்தியடையாவிட்டாலும் முக்கியமான சில பகுதிகளின் வேலைகளை நிறைவேற்றி கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது

இக் கும்பாபிஷேகத்தை அடுத்து 24 நாட்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

— —

## கெனமனின் ஆசை

கல்கிசை, ஞாயிறு

'நான் தொழிலாளர்களுடன் சேர்ந்து வேலைசெய்ய ஆசைப்படுகிறேன். அப்படிச் செய்யவும் போகிறேன். கட்டிடவேலைகளைப் பொறுத்தளவில் வேலைபழகுபவனுக நான் இருக்கிறேன். எனக்கு அவ்வேலை பற்றி வேறொன்றும் தெரியாது' எனவே எமது தொழிலாளர்கள் இத்தகைய வேலைகளைச் செய்பவர்களாக மட்டுமிராது போதிப்பவர்களாகவும் இருக்கவேண்டும்'

இரத்மலானையில் கட்டிட நிர்மாண தொழிலாளர்கள் தனக்களித்த வரவேற்புபசாரத்தின்போது உரையாற்றிய வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், 'பொதுமக்களுக்கு நன்மைபயக்கக்கூடிய வகையில்முன்னைய அரசாங்கம் செயலாற்றுததினுலேயே அது தோல்வியடைந்தது. இதை கருத்தில் கொண்டு பெரும்பான்மை வெற்றிபெற்ற நாம் நாட்டுக்கு நல்ல சேவை செய்ய வேண்டும்' எனக் கூறினுர்.

— —

## விசர்நாய்கள் அதிகரிப்பு

முசலி ஞாயிறு

முசலிவடக்குக் கிராம சபை எல்லைக்குள் விசர்நாய்கள் அதிகரித்து வருவதாகவும், இவற்றைச் சுட்டு ஒழிக்குமாறும் முசலி வடக்குக் கிராமசபைத் தலைவர் ஜனுப் மீராசாகிபு மன்னுர் உள்ளூராட்சி உதவி ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

முசலி வடக்கு கி. ச எல்லைக்குள்ளான அரிப்புக்கிராமத்தில் இவ்வாரம் ஒருவரை விசர்நாய் கடித்தது குறிப்பிடத்தக்கது.

# அரசாங்க ஊழியருக்கு அரசியல் உரிமை

## கொள்கை அளவில் ஏற்றுள்ளதாக பிரதமர் கூறுகிறுர்

கொழும்பு, ஞாயிறு

அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை கொடுக்க கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளோம். இது பற்றிப் பின்னர் ஆராயப்படலாம். அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த எம். பிக்கள் ஆட்சிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் மிகவும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவேண்டும்' என்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா நேற்று நடைபெற்ற ஆட்சிமன்றக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

அமைச்சர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காக ஒருகுழு நியமிக்கப்படும். இக்குழு ஆலோசனை கூறுவதற்காக நியமிக்கப்படுவதேயொழிய தொந்தரவு கொடுப்பதற்காகவல்ல. இதில் விஷயம் தெரிந்தவர்கள் நியமிக்கப்படுவதால், அமைச்சர்களுக்கு இவர்களால் பெரும் நன்மை ஏற்படும். தேவையான நேரங்களில் தகுந்த ஆலோசனைகளை இவர்களிடமிருந்து பெறமுடியும் என்றும் பிரதமர் மேலும் கூறினுர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

எவனது நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் ஆழுமோ அதனையே நான் மகாத்மா என்பேன்; அன்றேல் அவன் துராத்மாவே.

— சுவாமி விவேகானந்தர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna:
Post Box: 49, Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 25-ந் திகதி (8-6-70)

## தமிழ்க் கட்சிகள் தீர்மானம்

கொழும்பிலே தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ் இவற்றின் குழுக்கள் கூடி, புதிய அரசியல் நிலை பற்றி ஆராய்ந்து முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. கூட்டணி அரசாங்கம் மேற்கொள்ளும் சகல முற்போக்கு நடவடிக்கைகளையும் ஆதரிக்குமென்று தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுவும், வேலையில்லாப் பிரச்னை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்புபோன்ற முக்கிய பிரச்னைகளைத் தீர்ப்பதில் கூட்டணி அரசாங்கம் மேற்கொள்ளும் சகல முயற்சிகளிலும் தமிழ்க் காங்கிரஸ் முற்றாக ஆதரிக்குமென்று தமிழ்க்காங்கிரஸ் செயற்குழுவும் தீர்மானித்துள்ளன. இவ்விரு கட்சிகளும் புதிய அரசாங்கத்துடன் நல்லுறவுகொண்டு தேசிய அபிவிருத்தி வேலைகளில் ஆதரவளித்து ஒத்துழைக்கத் தீர்மானித்துள்ளது அரசியல் விவேகமாகும். சபாநாயகர், உப சபாநாயகர், கமிட்டிகளின் உபதலைவர் ஆகிய பதவிகளுக்கான தேர்தல்களிலும் அரசாங்கக்கட்சி வேட்பாளர்களையே தமிழரசுக்கட்சி ஆதரிப்பதெனத் தீர்மானித்து அவ்விதமே செய்ததும், குறிப்பிடத்தக்கது.

சிறுபான்மைச் சமூகங்களின் நலவுரிமை, ஜனநாயக அமைப்பில் பாதுகாக்கப்படவேண்டுமாயின் அச் சமூகப் பிரதிநிதிகளுக்கு சில நல்ல யோசனைகளை பிரிட்டனின் காலஞ்சென்ற பிரதமரும், இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் அளித்தவருமான அட்லி பிரபு கூறியிருந்தார். இவைசென்ற வார இதழ் ''அரசியல் அரங்கில்'' பிரசுரமாயிருந்தன. சிறுபான்மை சமூகத்தவர்களுக்குள்ளாக ஒற்றுமைவேண்டுமென்றும், பெரும்பான்மை சமூகத்தவருடன் முட்டிமோதாமல் அவர்களது நல்லெண்ணத்தையும் அபிமானத்தையும் பெற வேண்டுமென்றும் கூறியிருந்தார். சிறுபான்மை சமூகத்தினரின் உண்மையான பாதுகாப்பு. பெரும்பான்மையினரின் அபிமானத்தில்தான் தங்கிஇருக்கிறதென்று மகாத்மாகாந்தியும் பன்முறை அறிவுறுத்தியிருக்கிறார், ஆகவே இரு தமிழ்க்கட்சிகளும் அரசாங்கத்தை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளது. மேற்குறித்த யோசனைக்கு ஒத்ததாகவுள்ளன. இதனால் நல்ல பலன் கிடைக்குமென்றே எதிர்பார்ப்போம்.

இலங்கையிலுள்ள தமிழ்ச் சமூகத்தின் இன்றைய குறைகளுக்கு ஏதாவது காரணமிருப்பின் அது பெரிதும் தமிழ்ச்சமூகத்தையே சார்ந்ததாகும். சாதி, சமயம், தீண்டாமை முதலிய காரணங்களால், சமூகத்திலே ஒற்றுமையில்லாமல் இருக்கின்றது. அன்புக்கு இடமில்லை. அரசியல் சுயநலன்களும், பதவிவேட்டையும், கட்சிப் பிளவுகளும் சமூகத்தைச் சின்னாபின்னப் படுத்தியுள்ளன. வேலையில்லாக்கஷ்டம் வாலிபர்களைத் திகைக்க வைக்கின்றது. சீதனப் பிரச்னை நமது பெண்குலத்தை அவமதிக்கின்றது. இவ்வித குறைகளுக்கான தீர்வு. நிச்சயம் அரசாங்கத்தின் கையில் இல்லை. தங்களுக்கு அரசியல் பலமும் செல்வாக்கும் இல்லையே என்று மனம் உடைந்து வாளா இராமல். இன்று சமூகத்திலே உள்ள சிக்கல்களை ஆராய்ந்து அவற்றுக்கெல்லாம் அன்பை அடிப்படையாகக்கொண்டு தீர்வுகாண முற்பட்டால், சமூகப் பிரச்னைகள் தீரவும், அரசாங்கமும் தமிழ்சமூகத்தின் மீது புது மதிப்புக்கொண்டு, அவர்களது உதவியையும் ஆதரவையும் நாடவும், நாட்டில் மீண்டும் தமிழ் சமூகத்தின் மதிப்பு உயரவும் வழிபிறக்கும். 'தன்கையே தனக்குதவி' என்பதையும், தீதும் நன்றும் பிறர் தரவாரா என்பதையும் மறவாமல் தமிழ்ச் சமூகத்தினர் ...

# சந்தக் கவிமழை சிந்திய தமிழ் நாவலரேறு

**அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் எடுக்கும் ஐந்தாவது சேக்கிழார் விழா இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது. இவ்விழாவையொட்டி சேக்கிழார் பெருமையைக்கூறும் இக்கட்டுரை இங்கு வெளியிடப்பெறுகிறது.**

உலகெலாமுணர்ந்தோதற்கரியவனை, உலகெலாமுணரும் வண்ணம் திருத்தொண்டர் வரலாறுகளைத் தெய்வச் செந்தமிழால் பிரித்துப்பாடிய தெய்வக் கவிஞர் சேக்கிழார்சுவாமிகளாவர்' ஆனமையால், அச்சேக்கிழார் சுவாமிகள் தெய்வீகமணங்கமழுஞ்செந்தமிழ்க் கவிகளை நாம் ஆராய்ந்து பார்த்தால் அவ்வாராய்ச்சியின் பலனாகப் பலபல முடிவுகள் உண்டாகலாம். எமது மனசின் கண்ணே சேக்கிழார் சுவாமிகளின் தெய்வீகக் கவிகளைப்பற்றி 'சந்தக்கவிமழை சிந்தப் பாடிய தமிழ் நாவலரேறு' என்று சொல்லும் வண்ணம் ஓர் எண்ணம் இப்போது உதயமாகின்றது. அவ்வெண்ணத்தின்படி சேக்கிழார் சுவாமிகளின் திருத்தொண்டர் புராணத்தை ஆராய்ந்தால், ஒரு பெரிய புதிர் புலப்படும்போலத் தோன்றுகின்றது. ஆம்; சேக்கிழார் சுவாமிகளின் தெய்வீகஉணர்ச்சி ததும்பி எழுந்து வழிந்தோடுகின்ற கவிகள் பலவற்றுள்ளும் ஆங்காங்கே பலபல சந்த இசைகள் எழுகின்றன. அச் சந்த இசைக்கவிகள் முழுவதையும் இச்சிறிய கட்டுரையில் எடுத்துக்காட்ட முடியாது விட்டாலும் ஒரு சிறிதளவாவது ஆராய்ந்து பார்ப்போம்

தமிழ்மொழி, என்றும் இனிமையுடையது. அவ்வினிமைக்குக்காரணம், தமிழ்மொழியின் இயல்பான தன்மையேயாகும். எம்மொழியினுஞ் செம்மொழியாகிய தாய்மொழியிலுள்ள இனிமையை எடுத்து இசைத்தால் அவ்வினிமை இசைக்கும் இசையும், இயலுக்கும் இசையும், நாடகத்துக்கும் இசையும் முத்தமிழும் ஒத்தியலும் சிறப்புவாய்ந்த தமிழ்மொழியிலே இசைத்தமிழ் முக்கியமாகிய ஓர் இடத்தைப் பெறுகின்றது. இசைக்கு இசையாதவர்கள் இவ்வுலகிலில்லையே! பாம்பு, அசுணமா, யானை முதலிய பிராணிகளே இசைக்கு இசைந்துருகி வழிப்படுகின்றன என்றால், எம்மனோர் இயல்பை இயம்பவும் வேண்டுமா? இல்லையே! மக்கள் தம்மன இன்பத்துக்கு எக்காலமும் இசையையே விரும்புவார். சீவகசிந்தாமணியை விரும்பிய அரசனைத் திருப்பித் திருத்தொண்டர் புராணத்தி...

...ப்புவரி பந்து, பல்லாண்டு, பல்லி, பள்ளியெழுச்சி, பாம்பாட்டி, பிடாரன், பொற்சுண்ணம் பயங்குதிணை நிலைவரி, முகச்சார்த்து, முகமில்வரி, முகவரி, மூரிச்சார்த்து. வள்ளைப்பாட்டு, பலவகைச் சித்தர்பாடல்கள், நொண்டிச் சிந்து, சிந்து, கும்மி, கோலாட்டம், கண்ணிகள், ஆனந்தக்களிப்பு, கீர்த்தனங்கள் முதலிய பலப்பலவாகிய இசைப்பாடல்களை இசைத்து இன்பங்கண்டவர் தமிழர். அத்தமிழர்க் கரசனைத் தமது சந்தவின்பத்தால், தமது சொந்த அரசனாக்கி, மனந்திருப்பிய பெருமை சேக்கிழார் சுவாமிகளையே சாருமென்பதற் கையமுண்டோ? இல்லையே இல்லை!

தென்று ஏங்குகின்றார் சுந்தரர் முன்னர் என்னைப் பித்தனென்று ஏசினாய். பித்தா என்றே பாடுக என்றார். இந்நிகழ்ச்சியை உணர்த்த வந்த சேக்கிழார் ''பித்தா பிறைசூடி'' என வருந் தேவாரத் திருப்பதிக இசையிலேயே தமது சந்தக்கவிகளையுஞ்சுந்தரமாகத் தொடுக்கின்றார்.

''கொத்தார்மலர்க் குழலா
ளொரு கூறாயடியவபால்
மெய்த்தாயினும் இனி
யானை அவ்வியன் நாவலர்
பெருமான்
பித்தா பிறைசூடி எனப்
பெரிதாந்திருப் பதிகம்
இத்தாரணி முதலாம்உல
கெல்லாம்உ(ய்)யஎடுத்தார்

இப்பாடலும் தேவாரப் பாடலும் ஒரே சந்தமாக

### பண்டிதர் செ. சிவப்பிரகாசம்

திருத்தொண்டர் வரலாறுகளை இனிய தமிழ்க் கவிகளாலே. உலகமெலாம் உய்யஓதியருளிய சேக்கிழார் சுவாமிகள், தமிழுக்கே சொந்தமாகிய சந்த இசையைத் தவறவிடுவாரா? இல்லையே! இழுக்குடைய பாட்டையே இசையோடு சேர்த்து இசைக்க இன்பம்பெருகுமானால், இழுக்கில்லாத் தெய்வக் கவிகளை இசையோடு சேர்த்து இசைத்தால் என்ன இன்பம் நிகழும் என்பதை ஆராய்ந்தறிந்தின்புற வ சகநேயர்களையே வரவழைக்கின்றேன். அனுபவியுங்கள்!

தமிழிலே ''பண்'' என்று ஒரு பண்டமுண்டு அது மிகுந்த அதிமதுரச் சரக்கு. அச்சரக்கு, இச்சகத்தில் தமிழிலே பூரணமாக உண்டு. ஆதிகாலத்திலும் இருந்தது. இக்காலத்திலு மிருந்துவருகிறது. இச்சரக்கைக்கொள்வனவு செய்பவர்கள் இக்காலத்தில் அருகிவருகிறார்கள். என்றாலும் பண் ...

இளித்து இன்பமளிப்பதை நான் நன்கு உணரலாம்,

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லையின் மருங்கிலே அணைகின்றார் அவ்வணைதலைநமக்கெல்லாம் அறிவிப்பதற்கு நல்ல அணைதல் மிக்க சந்த இசையில் பாக்களைப் பாடியருளியுள்ளார் சேக்கிழார் சுவாமிகள். மகிழ்ச்சிப் பிரவாகம் அப்படியே பிரவாகித் தோடுவதை உணர்ந்தோர் நன்கு உணர்வர். யாழொலி முழவொலி நாத ஒலி, வேதஒலி, கீதஒலியாகிய ஒலிகள் நீங்காத தில்லையானமையால் அத் தில்லையை அணையும் நிகழ்ச்சியையும் மகிழ்பூக்கும் சந்தப் பாடலாற் சாற்றுகின்றார்.

தேமலங்கலணி மாமணி
மார்பின்
செம்மலங் [illegible] கயல்கள்
செங்கமலத்தண்
பூமலங்க எதிர் பாய்வன
மாடே
[illegible]மலம்புதிரை வெள்
வளை வாவித்
தாமலங்குகள் [illegible]ம்பணை

இனி சுந்தரர் திருவாரூரிலே கமலினியாராகிய பரவையாரைச் சந்திக்கின்றார், சந்தித்த சந்திப்பிலே சுந்தரர்க்கு அதிசயம்தாங்க முடியவில்லை. அவ்வதிசய நிலையை அதிசயமான சந்தப்பாக்களால் இந்தப் பாரோர் அறியவைக்கின்றார் சேக்கிழார் சுவாமிகள். அந்தப் பாக்களுள் இரண்டு.

'கற்பகத்தின் பூங்
கொம்போ காமன்தன்
பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணி
யத்தின் புண்ணியமோ
புயல் சுமந்து
விற்குவளை பவளமலர்மதி
பூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ
அறியேன் என் றதிசயித்
தார்.'

பரவையாருங் காணுகின்றார் எப்படி?

முன்னேவந் தெதிர்த்
தோன்றும்முருகனோ?
பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்
மார்பின் விஞ்சையனோ?
மின்னேர்செஞ் சடையண்
ணல் மெய்யருள்பெற்
றுடையவனோ?
என்னே! என் மனந்திரித்த
இவன்யாரோஎன நினைந்
தார்'

இப்பாடல்கள் மகிழ் பூக்கும் பார்வைகட்கு இயைந்தனவாகச் சந்தஇசை மகிழ்வைத் தருவதைக் காணலாம்.

உதியர் பெருமானாகிய சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தரமூர்த்திசுவாமிகளும் ஒருவர் ஒருவரிற் கலந்து உதியர் பெருமானின் மணிவாயிலைச் சென்றடைகின்றார்கள். அத்தருணம் தெய்வக் கவிஞரின் சந்தக் கவிகளை நோக்குங்கள்

''ஆரணமொழிகள் முழங்
கிட ஆடினர் குணலைகள்
அந்தணர்
வாரண மதமழை சிந்தின
வாசிகள் கிளரொளி

# சேக்கிழார் விழா

சேக்கிழாருக்கு எடுக்கும் விழா செந்தமிழுக்கு எடுக்கும் விழா. சிவநெறிக்கு எடுக்கும் விழா. திருமுறைக்கு எடுக்கும் விழா செயற்கரிய செய்த பெரியோர்க்கு எடுக்கும் விழா. ஒரு தூய வரலாற்றாசிரியருக்கு எடுக்கும் விழா. அன்புப் பெருக்குக்கு எடுக்கும் விழா. சுருங்கச் சொல்லுகில் நல்லன எல்லாவற்றிற்கும் எடுக்கும் விழா.

சேக்கிழார் தந்த தெய்வத்தமிழ் நூல் ஈடும் எடுப்புமற்றது. தமிழ்மொழியிலே மட்டுமல்ல வேறு எம்மொழியிலும் இத்தகைய அன்புப் பெருங் காப்பியத்தைக் காண்டலரிது. அன்பைப் பெருக்கி அன்பு வடிவமாக வாழ்ந்த பெரியோர்களுடைய வரலாறு கூறும் நூல் இது போன்றதொன்றைக் கூறுங்கள் பார்க்கலாம். நெஞ்சங் கனியக் கனியக் கண்ணீர் வாரக் ...

வாங்கு வாழ்ந்து காட்டிய மனவழகுக்காக இயற்கை வளம் பாடப்படுகின்றது சேக்கிழாரால். தோன்றி மறையும் சின்னாள் அழகுக்காகவல்ல அவற்றின் என்றுஞ் சிதையாத தெய்வீக வளத்துக்காக. தண்ணிலா பாடப்படுகின்றது சேக்கிழாரால், அது மாதர் மிகத்தை நிகர்க்கும் வெண்ணிலா வானமைக்காகவல்ல. அண்ணல் வெண்ணீற்றின் பேரொளி போன்ற நீணிலா வானமைக்காக. இவ்வாறே ''உள்ளுவவெல்லாம் உயர்வுள்ளல்'' என்ற வள்ளுவர் வாய்மையின் நெறியில் இயங்குவது அவர்தம் அளப்பெரும் பெருங்காப்பியம்.

கங்கை வேடனைச் சிந்திக்க வழி காட்டிய காளத்தி வேடனைப் பாடியவர் அவர். கல்லுங்கரையக் கண்ணப்பர் அன்புநெறியை உலகுக்குக் காட்டிபவர் அவர். அப்பரையும் சம்பந்தரை...

### பண்டித வித்துவான் க. கி. நடராஜன் பி. ஓ. எல்.

...கவிபாடியவர் சேக்கிழார். அவர் தொட்டதெல்லாம் தெய்வ மணங் கமழும். இவ்வாறு பாடுந்திறன் ''சேக்கிழார்க்கெளிதலது தேவர்க்கும் அரிதால்'' என்றார்கள் பெரியோர்கள். அவர்களாற் பாடப்பெற்ற பெரியோர்கள் ''கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றிவீடும் வேண்டாவிறலின் விளங்கினோர்'' அவர்கள் வீரமே வீரம். ஈர அன்பினராய் யாதுங் குறைவிலராய் விளங்கிய இவ்வீரப் பெருமக்களைப் பாடிய வீரர் சேக்கிழார். வாதாவிப் போர் வென்ற வீரப் பரஞ்சோதி பாடப்படுகிறார் சேக்கிழாராலே. ஏன்? போர் வென்றவீரத்துக்காகவல்ல சிறுத்தொண்டனாகிய சிறந்த வீரத்துக்காக மன்னர் பாடப்படுகிறார்கள் சேக்கிழாராலே அவர்கள் மன்னர்களானமையினாலே அல்ல அவர்கள் மாபெருந்தொண்டர்களானமையாலே அமைச்சர்களும் சேனைத் தலைவர்களும் பாடப்படுகின்றனர் சேக்கிழாராலே. அவர்கள் அமைச்சர்களும் சேனைத் தலைவர்களும் ஆனமைக்காகவல்ல அன்பர்களாக மாறினமைக்காக, மாதர்கள் பாடப்படுகின்றார்கள் சேக்கிழாரால். அவர்கள் வடிவழகுக்காகவல்ல, வாழ்...

...யும் அளப்பருந்தொண்டர்களையும் அவர் தம் திருவடிவங்கள் எம் அகத்தை விட்டகலாத வகையில் சொல்லோவியமாகத் தீட்டுயவர் அவர். இப்பெருமக்களைச் சேக்கிழார் காட்டத்தான் நாம் காண்கின்றோம். அவர்களைத் தாமும் வணங்கி எம்மையும் வணங்கும் முறையில் வணங்கச் செய்பவர் சேக்கிழார். அமைச்சராக இருந்த அவர் தமது தெய்வப்புலமையால் தம்மை எம்மவர் என்று நாம் கொள்ளக்கூடிய வகையிலே அமைத்துக்கொண்டு அப்பெரியார்கள் பெருமையெல்லாம் அளந்தறிந்து அநுபவித்து எமையுப் தம்மோடு சேர்ந்து அநுபவிக்கச் செய்யும் முறையில் பாடுகின்றார் தம் தெய்வப் பெருநூலை. திருத்தொண்டத் தொகை சேக்கிழார்க்கு முதல் நூல்துன்றுசீர்த்திருத்தொண்டத்தொகை இன்றெனுதரவா லிங்கியம்புகேன்' என்று சொல்கிறார் சேக்கிழார். சேக்கிழார் செய்த சீரிய விரிநூலினாலே திருத்தொண்டத் தொகையின் பெருமை விரிக்கப்படுகின்றன சேக்கிழார் இதனை செய்திராவிட்டால் திருத்தொண்டர் தொகை திருத்தொண்டர் திருநாமாவலியாகவே அதனை நுனித்...

(1-ம் கலம் பார்க்க)

''பாண்டிமா தேவியாரும் பரிவுடை அமைச்சனாரும்' திருஞான சம்பந்தப் பெரு...

ஒருகனியைக் கணவனுக்கு இட்டார்: அதனை உண்ட கணவனார்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன. சிறுபான்மை சமூகத்தவர்களுக்குள்ளாக ஒற்றுமைவேண்டுமென்றும், பெரும்பான்மை சமூகத்தவருடன் முட்டிமோதாமல் அவர்களது நல்லெண்ணத்தையும் அபிமானத்தையும் பெறவேண்டுமென்றும் அதிக பொறுமை காட்டவேண்டுமென்றும் கூறி வையும் நாட்டவும், நாட்டில் மீண்டும் தமிழ் சமூகத்தின் மதிப்பு உயரவும் வழிபிறக்கும். 'தன்கையே தனக்குதவி' என்பதையும், தீதும் நன்றும் பிறர் தரவாரா என்பதையும் மறவாமல் தமிழ்ச் சமூகத்தினர் தீவிரமாகப் பணிசெய்யவேண்டிய காலம் வந்துவிட்டது.

## சேக்கிழார் காட்டும் நன்னெறி

சைவ நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை அருமையான காவியமாக எழுதி, சைவத்திற்கும் தமிழுக்கும் ஒப்பற்ற தொண்டுசெய்துள்ள சேக்கிழார் பெருமானுக்கு, யாழ்ப்பாணத்தில் விழா எடுப்பது மிகவும் போற்றத்தக்க காரியமாகும் பெரிய புராணத்தை ஆக்கித்தந்துள்ள பெருந்தகையான இப்பெரியாரைப் பற்றி சைவர்களிலேயே பலருக்குத் தெரியாது. ஈழத்திலாவது சிலருக்குத் தெரியலாம். ஆனால் அவர் அவதரித்த தமிழகத்திலே அதுவும் இக்கால இளைஞர்களில் பெரும்பாலோருக்கு அவரைப் பற்றி ஒன்றும் தெரியாது. தெரிந்துகொள்வதற்கான சூழ்நிலையும் துரதிருஷ்டவசமாக அங்கு இல்லை.

இன்று சைவசமூகம் மிகவும் தாழ்வுற்று இழிந்த நிலைக்கு வந்திருக்கிறதெனில் அதற்குக் காரணம், சைவநெறியினை சைவமக்கள் மறந்து, வாழ்க்கையைக் கோணல் வழிகளில் நடத்துவது தான். சைவர்களென்போர் எவ்விதம் தனக்கென வாழாப் பிறர்க்குரியவர்களாக இருக்க வேண்டுமென்பதனையே அறுபத்தி மூன்று நாயன்மார்களும் தொகையடியார்களும் வாழ்ந்து காட்டியுள்ளனர். செயற்கரிய செய்த அவர்களது வாழ்க்கை, சைவசமூகத்திற்கு வழிகாட்டுவதாகும். எந்தச் சாதியில் பிறந்தாலும் அவர்கள் 'கங்கைவார் சடைக் கந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே' என்று நாவுக்கரசர் பாடி வைத்துள்ளதெல்லாம், வெறும் ஏட்டளவில் இருக்கிறதேயன்றி, காரியத்தில் இல்லை, நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து, சுயநலம்விட்டுப் பிறருக்காக வாழ சைவசமூகம் எப்பொழுது முற்படுகிறதோ அப்பொழுதே அச்சமூகத்திற்கு விமோசனம் பிறந்துவிடும்.

யாழ்ப்பாணத்தில் இன்றும் நாளையும் சேக்கிழார் விழா நடைபெறுகிறது. இதற்காக தமிழகத்திலிருந்து சைவப் பெரியார் முருகேச முதலியார் அவர்கள் வருகை தந்துள்ளார். அவ்விழாவில் கூறப்படும் அறிவுரைகளெல்லாம், சைவநெறியை விளக்கவும், அதன்படி சைவமக்கள் வாழ்க்கை நடத்தவும் சிறிதாவது உதவுமாயின், சைவம் மீண்டும் தழைக்கும். இன்றுள்ள இன்னல்கள் எல்லாம் தீரவும் மேன்மைகொள் சைவநீதியாகிய அன்பு உலகெலாம் விளங்கவும் உதவக்கூடும்.

---

பவும் வேண்டுமா? இல்லையே! மக்கள் தம்மன இன்பத்துக்கு எக்காலமும் இசையையே விரும்புவார். சீவக சிந்தாமணியை விரும்பிய அரசனைத் திருப்பித் திருத்தொண்டர் புராணத்தி[ல்] மனம் இசையச் செய்த இசைவு, இசைக்கவிஞர் சேக்கிழார்க்கே இயைந்த ஒரு பெருஞ்சிறப்பாகும். இசையானது தமிழோடு இரண்டறக்கலந்துள்ளது. ''தமிழோடிசைபாடல் மறந்தறியாதவர்'' நம்நாவுக்கரசர். அத்தமிழிசையை அள்ளித் தந்தவர் சேக்கிழார் சுவாமிகள்.

இசைத்தமிழ் பாகுபாடுகளை இக்காலத்தில் எடுத்தியம்புவதற்குரிய நூல்கள்பல இல்லையே, சிலப்பதிகாரமும் அதன் உரையுமின்றேல், நாம் இன்று ஒருவகையால் இசைத்தமிழை அறிவதும் இயலாததாகும். சேக்கிழார் சுவாமிகளும் ஆனாயனார் புராணத்துச் சிறிது விளக்கியுள்ளார்கள். முற்காலத்தில் இசைத் தமிழ்நூல்களாகிய பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசைநுணுக்கம், பஞ்சமரபு தாளசமுத்திரம் சச்சபுடவெண்பா, இந்திரகாளியம் பதினாறுபடலம், தாளவகையோத்து, இசைத்தமிழ் செய்யுட்டுறைக்கோவை முதலியன இருந்தன. இன்று நூல்கள் முழுவதாக அகப்பட்டில அவ்விசையை ஓர் அளவுக்குப் பரவலாக ஆங்காங்குள்ள தேவாரப் பண்களின் ஓசையைப் பின்பற்றியும், இசைப்பாடல்கள் பலவற்றைத் தாமாகவே ஆக்கித் தந்தும், பெரிய புராணத்தை ஒரு பெரிய இசை நூலாக்கிய பெருமை சேக்கிழார் சுவாமிகட்டுகே முற்றும் பொருந்துவதாகும்.

தமிழ்நாட்டிற் பண்டைக் காலத்தில் அனேக வகையான இசைக்கவிகள் இருந்தன. அவையாவும் தமிழரின் மாபெரும் பொக்கிஷமாகும். அவ்விசைப்பாடல்கள் அடுக்களை தொடக்கம் அரசவை ஈறாக ஆன்றோரால் இசைக்கப்பட்டுள்ளன அக்கச்சி, அச்சோ, அப்பூச்சி அம்மானை, ஆற்றுவரி, இம்பில், உந்தியார், ஊசல், எம்பாவை, கறபப்பாட்டு, கழல் கந்து. கவரி, காக்கை, காளம் கானல்வரி கிளிப்பாய் குணலை. குதம்பை, குயில், குரவை, குறத்தி கூடல் கொச்சகச் சார்த்து. கோத்தும்பி, கோழிப்பாட்டு. சங்கு, சாயல்வரி, சார்த்துவரி, சாழல் செம்போத்து தச்சராண்டு. தச்சாண்டி. தாலாட்டு, திணைநிலைவரி திருவங்கமாலை, திருவந்திக் காப்பு, தெள்ளேணம், தேர்ஞெகிழம், நிலைவரி, நையாண்டி, பகவதி, படை

[தி]லே பூரணமாக உளது. ஆதிகாலத்திலும் இருந்தது. இக்காலத்திலு மிருந்துவருகிறது. இச்சரக்கைக்கொள்வனவு செய்பவர்கள் இக்காலத்தில் அருகிவருகிறார்கள். என்றாலும் பண் பண்ணே! அப்பண்கள் குரல், துத்தம், கைக்கிளை உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழையும் நிரம்பப் பெற்றிருக்கும் இராகங்களாக அமையும். இந்த ஏழிலும் குறைந்துவருவன திறங்கள். இத்திறங்கள் பண்களுள் ஒவ்வொன்றிலுமிருந்து உண்டாகிப் பலவகைப்பட்டு வேறு வேறு பெயர்பெற்று வழங்கும். இவை ஏழிற்குறைந்த ஸ்வரங்களை உடையன. ஜன்னிய ராகங்கள் என்று அழைக்கப்படும்.

''நிறை நரம்பிற்றே
பண்ணெனலாகும்
குறை நரம்பிற்றே திற
மெனப்படுமே''

என்பது திவாகரம்.

இப்பண்கள் பலவுந் தேவாரங்களிற் பயின்று வருகின்றன. அப்பண்முறைகள் எல்லாவற்றையும் பாங்குற உணர்ந்தவர் சேககிழார் சுவாமிகள்.

தமிழே அவரைத் தன் பக்கமிழுத்துத் தனக்கியல்பாகவுள்ள இனிமையை அவர்மூலம் உலகத்தாருக்கு ஈந்துள்ளது. தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவராவது போலத் தென்னாட்டுடைய பண்களே எந்நாட்டவர்க்கும் இன்பம் பயப்பனவாயின.

சேக்கிழார் சுவாமிகள் தொடக்கத்திலும் இடையிலும் முடிவிலும் ''உலகெலாம்'' எனவரும் மங்கலச் சொல்லைப் பெய்து தமது பெரிய புராணத்தைப் பாடியருளியுள்ளார். அம்மங்கலம் எம்மைச் சும்மா இருக்க விடுமா? என்றும் சுமங்கலமாகவே இன்பம்பொங்க வாழ வைக்கிறது. அக்காலத்துச் சிந்தாமணி படித்த அரசன் மனந்திரும்பியதும் இக்காலத்துப் பன்னூற் புலவரும் மனம்மாறி விதந்தோதி வியப்படைவது பெரியபுராணச் சிறப்புப்பற்றியேயாகும். அத்துணை சிறந்த சந்தக்கவிகளை உடையது திருத்தொண்டர் புராணம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொள்ளும் பொருட்டு, எம்பெருமான் அந்தணத் திருக்கோலத்துடன் தண்டூன்றி வருகின்றார். அவருடைய திருக்கோலத்தைக்கண்டும் சுந்தரர் சிவபெருமானென்றுணரவில்லை பித்தனென்று ஏசுகின்றார். பின்னர்த் திருவெண்ணெய்நல்லூரில் உண்மையை உணருகின்றார் இறைவன் தம்மைப் பாடும்படி சுந்தரரைப் பணிக்கின்றார். எப்படிப் பாடுவ

[...] செங்கமலத்தண்
பூமலங்க எதிர் பாய்வன
மாடே
புள்ளலம்புதிரை வெள்
ளை வாவித்
தாமலங்குகள் [...]ம்பணை
சூழும்
தண்மருங்கு தொழு
வார்கள்தம் மும்மை
மாமலங்களற வீடருள்
தில்லை
மல்லலம்பதியின் எல்லை
வணங்கி'

என்று பாடியருளிய சேக்கிழார் சுவாமிகள் இதே சந்தத்தில் பன்னிரண்டு பாடல்களையாத்துள்ளார் அப்பாடல்கள் பன்னிரண்டும் சந்தவின் பந்தழைக்க நின்று சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தில்லைவரவை எல்லையில்லா இன்புடன் எடுத்தியம்புவது பாடல்களைப் படிப்பவர்களுக்கு நன்கு புலப்படும்.

சுந்தரர் தில்லையிலே சென்று திருச்சிற்றம்பல முன் திருஅணுக்கன் திருவாயிலை அணுகுகின்றார் அன்புந்தத் திருக்களிற்றுப்படி மருங்கிலே சென்று தாழ்ந்தெழுகின்றார். சுந்தரர் நிற்கும் அந்தமில் பேரின்பநிலையைச் சந்த நற்கவிகளாற் சாற்றுகின்றார் சேக்கிழார் சுவாமிகள்.

அவைகளுள் இரண்டு கவிகளைச் சந்தவிசையுடன் அன்புந்தப் படித்துப் பார்ப்போமா? ஆம் படியுங்கள்

'ஐந்துபேர் அறிவுங் கண்
களே கொள்ள
அளப்பருங் கரணங்கள்
நான்கும்
சிந்தையே ஆகக்குணம்
ஒருமூன்றும்
திருந்துசாத் துவிகமே
ஆக
இந்துவாழ் சடையான்
ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங்
கடத்தின்
வந்தபேர் இன்பவெள்
ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில்
மலர்ந்தார்.'

'தெண்ணிலா மலர்ந்த
வேணியாய் உன்தன்
திருநடங் கும்பிடப்
பெற்று
மண்ணிலே வந்த பிற
வியே எனக்கு
வாலிதாம் இன்பமாம்
என்று
கண்ணில் ஆனந்த அருவி
நீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேல்
குவித்துப்
பண்ணினால் நீடி அறிவ
ரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்
தார்.'

பேரானந்தத்து அழுந்திப் பேரன்புடன் நிற்கும் பெருநிலையை இப்பெரிய புராணச் செய்யுள்கள் பெருகிய இசையுடன் பெட்புடனறிவிக்கின்றனவே!

சந்தக் கவிகளை நோக்குங்கள்

''ஆரணமொழிகள் முழங்
கிட ஆடினர் குணலைகள்
அந்தணர்
வாரண மதமழை சிந்தின
வாசிகள் கிளரொளி
பொங்கின
பூரண கலசம் மலிந்தன
பூமழை மகளிர் பொழிந்
திடும்
தோரண மறுகு புகுந்தது
தோழர்கள் நடவிய
குஞ்சரம்.''

இப்பாடல் தோழர்கள் நடவிய குஞ்சரத்தினதும் அவர்களின் செல்கையினது இயல்பையும் இசையாலேயே இசைக்கின்றன.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் மூன்று வயசினிலேயே, ''தோடுடைய'' முதலாகிய தேவாரங்களைப் பாடியருளிய அற்புதத்தைத் தோணிபுரத்தவர் கேள்வியுற்றுப் பெருமகிழ்வடைந்து, வரவேற்கின்றனர். அவ்வரவேற்பைக் கூறவந்த சேக்கிழார் சுவாமிகள், மூன்று பாடல்களிலே மொழிகின்ற சந்தச்சிறப்பை அம் மூன்று பாடல்களையு பாடி அறிந்துகொள்ளலாம்.

பாலறாவாயரின் பாடல்கள் இதோ உள்ளன; படித்துப்பார்ப்போமா? ஆம்!

காழியர் தவமே கவுணியர்
தனமே கலைஞானத்
தாழிய கடலே அதனிடை
அமுதே அடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை
வானோர் தனிநாதன்
ஏழிசை மொழியாள
தன்திரு வருள்பெற்றனை
என்பார்''

''மறைவளர் திருவே
வைதிக நிலையே வளர்
ஞானப்
பொறையணி முகிலே
புகலியர் புகலே பொரு
பொன்னித்
துறைபெறு மணியே
சுருதியின் ஒளியே
வெளியேவந்
திறையவ னுமையா
ளுடனருள் தரஎய் தினை
என்பார்''

''புண்ணிய முதலேபுனை
மணி அரைஞாணொடு
போதும்
கண்ணிறை கதிரே
கலைவளர் மதியே
கவின்மேவும்
பண்ணியல் கதியே
பருவமதொடுமூ
வருடத்தே
எண்ணிய பொருளாய்
நின்றவர் அருள்பெற்
றனைஎன்பர்''

சிவானந்தப் பெருங்கன்றை வரவேற்ற சிவக்கவியின் சிறந்த சந்தக்கவிகளைச் செவியாரக் கேட்டுச் சிவானந்தம் அடையலாமே! மொழிக்குமொழி தித்திக்கின்ற தீங்கரும்பினுமினிய செந்தமிழ்ச் சந்தப் பாடல்கள் இவையன்றோ!

பாடப்படுகின்றார்கள் சேக்கிழாரால். அவர்கள் வடிவழகுக்காகவல்ல, வாழ் திருத்தொண்டர் திருநாமாவலியாகவே அதனை நுனித்

(1-ம் கலம் பார்க்க)

---

''பாண்டிமா தேவியாரும் பரிவுடை அமைச்சனாரும்'' திருஞானசம்பந்தப் பெருமானைச் சந்திக்கின்றனர். அச்சந்திப்பினை எச்சந்தத்தால் இசைக்கலாமோ அச்சந்தத்தாலேயே இசைக்கின்றார் சேக்கிழார் சுவாமிகளாகிய பெருநாவலரேறு. எங்ஙனம் இசைக்கின்றார்?:-

ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்
துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்
கொழுந்தைத்
தேனக்கமலர்க்கொன்
றைச் செஞ்சடையார்
சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்
பைக் கண்களிப்பக்
கண்டார்கள்''

இதுபோல ஆறுகவிதைகளை ஆறஅமர அறைகின்றார் அருங்கவிஞர் சேக்கிழார். எல்லாக் கவிகளையும்பாட, இசைதானாகவே அத்திருஞான சம்பந்தப் பெருமானைத் தரிசித்த பெரும் பாக்கியமாகிய இன்ப வெள்ளத்தை, அள்ளியள்ளிச் சொரிவதைக்காணலாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திலகவதியார் ஐந்தெழுத்தோதிக் கொடுத்த அருமருந்தாகிய விபூதியை அணிந்து தமது நிலையில் மாறுகின்றார். நோயாகிய சூலை தீரப்போகிறது. மாற்றார் புரம் மாற்றிய வேதியனை மனமாரப் பாடித்துதிக்கின்றார். ''கூற்றாயின வாறு'' எனவரும் திருப்பதிகம் பாடியருளுகின்றார். அந்நிலையை உணர்த்தவந்த பெருநாவலராகிய சந்தக்கவிஞர் சேக்கிழார்சுவாமிகள், அதே பண்ணிலேயே தம்முடைய பாடல்களையும் பாடியருளுகின்றார், அவர் பாடுகின்றார்:

''நீற்றால் நிறைவாகிய மேனியுடன் நிறையன்புறு சிந்தையில் நேசம்மிக மாற்றார் புரம் மாற்றிய வேதியரை மருளும்பிணி மாயை அறுத்திடுவான் ''கூற்றாயின வாறு விலக்ககிலீர்'' என நீடிய கோதில் திருப்பதிகம் போற்றாலுல கேழில் வருந்துயரும் போமாறெதிர் நின்று புகன்றனரால்''

என்று அவர் பாடுகின்ற சந்தம், நாவுக்கரசரின் சந்தத்தை எந்த அளவிலும் ஒத்தனவாகவே இசைந்திருத்தல், படிப்போர்க்கு இனிது விளங்கும்.

காரைக்காலம்மையார் கணவன் வைத்த இரண்டு மாங்கனிகளுள் ஒன்றைச் சிவனடியார்க்கு அமுதாக்கி ஒருகனியைக் கணவனுக்கு இட்டார். அதனை உண்ட கணவனார் ''இனையதொரு பழம் இன்னும் உளத்தனை இடுக'' என்றார் அந்நிலையில் காரைக்காலம்மையாரின் செய்யுள் மனோபாவம்நன்கு புலப்பட்ட சேக்கிழார் சுவாமிகள் செய்கின்றார்.

அம்மருங்கு நின்றயாவார் அருங்கனிக்கங் கென் செய்வார்! மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும்விடையவர்தாள் தம்மனங்கொண்டுணர்தலுமே அவர் அருளால் தாழ் குழலார்

கைம்மருங்கு வந்திருந்த(து) அதிமதுரக் கனியொன்று' இச்செய்யுளைச் சந்தவிசையுடன் பாடவே காரைக்காலம்மையாரின் மன அன்பும் கடவுட்பத்தியும் திடநிலையும் அற்புத நிகழ்வும் அப்படியே புலப்படுவதை அறியலாம்.

உலகெலாமுணர்ந் தோதற்கரியவனை நாம் இன்னிசையுடன் ஓதிஉணர வழிகாட்டித்தந்த பெருமை. பெருநாவலரேறாகிய சந்தக் கவிஞர் சேக்கிழார்க்கே உரியதாகும் அதனால் என்றும் இன்பம் பேருகுவதாக!

அன்றியும், பெரியபுராணமாகிய பெருங் காப்பியத்தை அருளிச்செய்த, பெருநாவலராகிய சந்தத் தெய்வக் கவிஞர் சேக்கிழார். உலகம் என்றும் இன்புற்றிருக்கவேண்டுமென்றே இக்காவியத்தை இயற்றியருளினார் என்பது அவரது கவிகளைக் கற்போர்க்கு இனிது புலப்படும். சிவனடியார்களது புகழ் இவ்வுலகில் என்றும் நிலவவேண்டுமென்பது அவரது பெருவிருப்பாகும். அதனாலேயே அவர் ஈற்றில்,

'என்றுமின்பம் பெருகும்
இயல்பினால்
ஒன்று காதலித் துள்ள
மும் ஓங்கிட
மன்று ளாரடி யாயவர்
வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி
உலகெலாம்'

என்று அருளிச்செய்தார்.

ஆகையால் நாம் நமது சேக்கிழார் சுவாமிகளை,

இந்தப்புவிதனி லெந்தக்
கவிஞனு மிவ்வா
றினிய கதை
சந்தக் கவிதனிற்
சாற்றற் கரிதெனத்
தாமே தனிக்கவியாய்ப்
புந்திக் கினியன புலவர்க்
கினியன புதுமைக்
கவிபுகலும்
சந்தக் கவிதமழை
சிந்தப் பாடிய
தமிழ்நா வலரேறே

என்று வாழ்த்தி வணங்கி இன்புற்று வாழ்வோமாக!

---

(8-ம் கலத் தொடர்ச்சி)

தறியமாட்டாத பலருக்குக் காட்சியளித்திருக்கும்.

தமிழ் வழங்கும் நாடாகிய மூவேந்தர் நாட்டினையே பெரும்பாலும்சேர்ந்ததிருத்தொண்டர் வரலாறுகளைத் தமிழ்மொழியிலே முத்தமிழ்ச் சுவையும் பொருந்த தமிழ்க்காப்பியமாக யாத்த தமிழ்ப்புலவர் சேக்கிழார்.

மூவேந்தர் தமிழ்வழங்கும்
நாட்டுக்கப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த
முறைமையோரும்
நாவேய்ந்த திருத்தொண்
டத்தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து
முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடை
மேல் அடம்பு தும்பை
புதியமதி நதி இதழி
பொருந்த வைத்த
சேவேந்து வேல்கொடி
யான் அடிச்சார்ந்தாரும்
செப்பிய அப்பாலுமடிச்
சார்ந்தார் தாமே
என்பது அவர் பாட்டு

ஆகவே உலகப்பொதுநூல் தந்தஉத்தமர் சேக்கிழார்.

---

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியில் 63-ம் இலக்க அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org